# இயேசுவே வாரும்

காலேப் யோசுவா
செல்: 9444701953, 9444709980
மின்னஞ்சல் : brocalebjoshua@gmail.com
வலைத்தளம்: www.yesuvaevaarum.com
முகநூல்: www.facebook.com/yesuvaevaarum

ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும்.வெளி.22.20

32,ஜெமிளத்திராஜ் நகர்,
எரையமங்கலம் ரோடு,
மப்பேடு, பேரம்பாக்கம் (வழி)
திருவள்ளூர் மாவட்டம் - 631402

## மதிகேட்டில் திரியும் மணவாட்டி ஊழியம்

(ஸ்தாபகர் – சென்னை, ஜீவஜெயம்)

## வேதவாக்கியங்களை, லவோதிக்கேயா சபைகாலத்துக்கடுத்த தீர்க்கதரிசியின் செய்திகளை அறியும் அறிவைப் பெற்றிறாதவர்களின் தமிழ் மொழிப்பெயர்ப்பு

(ஆங்கில செய்திகளை தமிழில் மொழிப்பெயர்க்க பலரால் பயன்படுத்தப்படும் தகுதியற்ற பாத்திரம் நாகர்கோவில், ஜெபக்குமார்)

## ஏழுமுத்திரைகளின் வெளிப்பாடு 1993 ன் ஆங்கிலப் பதிப்பு மற்றும் அதன் தமிழ் மொழிப்பெயர்ப்பு ஒரு விசுவாச துரோகம்

## ஏழாம்சபைக்கால தூதனுடைய செய்திகளுக்கு Voice of God – தேவனுடைய சத்தம் என்ற தலைப்பு ஒரு தேவதூஷனம்

(எல்லாவற்றையும் சிந்தித்து, சீர்தூக்கிப்பார்த்து செயல்படுங்கள்)

1. நான் சத்தியத்தின்படி நேசிக்கிற பிரியமான சகோதரர்களே, உங்களில் பெரும்பான்மையோர் என்னை ஏற்றுக்கொள்வதில்லை, எனக்கு விரோதமாய் பொல்லாத வார்த்தைகளை அலப்புகிறவர்கள் உண்டு, என்னை ஏற்றுக்கொள்ள மனதாயிருக்கிறவர்களை திசைதிருப்புவர்களும் உண்டு. என்னை அசட்டை பண்ணி, என்னை புறக்கணித்து, எனக்கு பலர் தங்கள் முகங்களை மறைத்துக்கொண்டாலும் என்னை அதிகமாக நேசித்து என்னிடம் அன்பு பாராட்டும் சில நல்ல உள்ளங்களும் உண்டு. உங்கள் அனைவரும் சமாதானம் உண்டாவதாக. உங்கள் ஆத்துமா வாழ்கிறது போல நீங்கள் அனைவருக்கும் எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டுகிறேன். நாம் அனைவரும் தேவனுடைய குமாரனை பற்றும் விசுவாசத்திலும், அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரணபுருஷராகும் வரைக்கும், பரிசுத்தவான்கள் பூரணப்படும் பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும், நான் கர்த்தரால் சுவிசேஷகனாக ஏற்படுத்தப்பட்டவனாயிருப்பதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள். நானும் என் அழைப்பையும், தெரிந்துகொள்ளுதலையும் உறுதிப்படுத்துவதில் ஜாக்கிரதை உள்ளவனாயிருக்கிறேன். ஆதலால் நான் என் ஊழியத்தில் ஒருக்காலும் இடறி விழுந்ததில்லை. நான் அறிந்திருக்கிற சத்தியத்தில் உறுதியாயிருந்து அவைகளை உங்களுக்கு நினைப்பூட்டுவதிலும் நான் அசதியாயிருந்ததில்லை. உங்களுக்குள் கள்ளப் போதகர்கள், கள்ள கபடமுள்ள வேலையாட்கள், நீதியின் ஊழியக்காரருடைய வேஷத்தை தரித்துக்கொண்டவர்கள், கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலரின் வேஷத்தை தரித்துக்கொண்டவர்கள், கேட்டுக்கேதுவான வேதப்புரட்டுகளை தந்திரமாய் கொண்டு வருகிறவர்கள் இருக்கிறார்கள் என்பதை மறந்து விடாதீர்கள். இவர்களை அநேகர் பின்பற்றுவார்கள். இவர்களுடைய தந்திமான வார்த்தைகளினால் அநேகரை தங்களுக்கு ஆதாயமாக வசப்படுத்திக்கொள்கிறவர்கள் என நான் அறிந்ததை உங்களுக்கு எழுதி எச்சரிக்கிறேன். நாள்தோறும் அவர்களுடைய அக்கிரமகிரியைகளை கண்டும், கேட்டும், நீதியுள்ள என்னுடைய இருதயத்தில் நீதிமானாகிய லோத்தைப்போன்று வாதிக்கப்படுகிறேன். பிரியமானவர்களே, அக்கிரமகாரருடைய வஞ்சகத்தினாலே நீங்கள் இழுப்பு சத்தியத்திலிருந்து விலகி விழுந்து போகாதப்படிக்கு எச்சரிக்கையாயிருங்கள். உங்களுக்கு சமாதானம் உண்டாவதாக.

2. 2019 ஆகஸ்ட் மாத மத்தியில் எனது அடுத்த நிருபமாக **தெய்வீக சுகம்** (Divine Healing) குறித்து எழுத குறிப்புகளை சேகரித்துக்கொண்டிருந்தேன். இதுகுறித்து பல ஆண்டுகளுக்கு முன்பே ஒரு நிருபம் எழுத பிரயாசப்பட்டேன். ஆனால் அந்த எண்ணங்கள் நிறைவு பெறவில்லை. இந்நாட்களில் அது என் சிந்தனைக்குள் வர அது குறித்து எழுத பிரயாசப்பட்டேன். ஆனால் அது மீண்டும் தடைப்பட்டது. இந்த நிருபத்தை உடன் எழுதவேண்டிய அவசியம் ஏற்பட்டது.

3. ஆகஸ்ட் மாதம் நான்காவது வாரத்தில் மணவாட்டி ஊழியம், ஸ்தாபகர் சென்னை சகோ.ஜீவஜெயம் அவர்கள் யூடியூபில் 01-07-2019 அன்று பிரசங்கித்த **"ஆயிரம் வருட அரசாட்சி நடந்து விட்டதா?"** என்ற வீடியோ செய்தியையும், 04-07-2019 அன்று பிரசங்கித்த **"எடுத்துக்கொள்ளப்படுதல் சம்பவித்துவிட்டதா?"** என்ற வீடியோ

செய்தியையும் எனக்கு பிரியமான ஒரு சகோதரர் எனது மொபைல் வாட்ஸ்ஆப் -க்கு அனுப்பி வைத்தார். சகோ.ஜீவஜெயம் தனது செய்தி முடிவில் எடுத்துக்கொள்ளப்படுதல் நடந்து விட்டது, இப்பொழுது நாம் ஆயிரம் வருட அரசாட்சியில் இருக்கிறோம் என சபைகால செய்திகளைக்கொண்டு பிரசங்கித்து, இதை ஏற்றுக்கொள்ளாதவர்கள் தங்கள் கைவசம் உள்ள செய்தி புத்தகங்களை வேறு யாருக்காவது கொடுத்துவிட்டு, நீங்கள் ஸ்தாபன சபைகளுக்கு சென்று அங்கு அமருங்கள் என மிக்க காரசாரமாக பிரசங்கிக்கிறார் என ஆதங்கப்பட்டு, இதுகுறித்து எனது ஆலோசனைகளை கூறும்படி கேட்டுக்கொண்டார். இதுகுறித்து ஏற்கெனவே ஜீலை மாதத்தில் மற்றொரு ஆவிக்குரிய சகோதரரர், சகோ.ஜீவஜெயம் தன் உபதேசத்திற்கு ஆதரவாக எடுத்துக்காட்டிய செய்தி **"பரலோக மணவாளன் மற்றும் பூமிக்குரிய மணவாட்டியின் வருங்கால இருப்பிடம்"** பக்கம் 46 ல், இரண்டாவது பத்தியை சுட்டிக்காட்டி இதைக்கொண்டு சகோ.ஜீவஜெயம் நாம் அனைவரும் இப்பொழுது ஆயிரம் வருட அரசாட்சியில் இருக்கிறோம் என கூறுகிறாரே, இது ஏற்றுக்கொள்ள கூடியதா என்று எனது அபிப்பிராயத்தை கேட்டிருந்தார். அப்பொழுது சகோ.ஜீவஜெயம் உபதேசம் தவறானது என சில வரிகளில் சொல்லி முடித்தேன். சகோ.ஜீவஜெயம் தனது பாதையை தானே கோணலாக்கிக்கொண்டதை கண்டேன். தேவனுடைய செயலை கவனித்துப்பார்த்தேன். தேவன் கோணலாக்கியதை நேர்மையாக்கத்தக்கவர்கள் யார் என்பதையும் கண்டுக்கொண்டேன். முடிவாக இவர்கள் சந்தேகங்களை அகற்ற நான் பரிசுத்த வேதாகமத்தையும், இக்காலத்திற்குரிய செய்தியையும் அங்கும் இங்கும் திருப்பலானேன்.

4. 23.08.2019 அன்று சகோ.ஜீவஜெயத்தை தொடர்பு கொண்டு அவரது போதனைகள் தவறு என்று சுருக்கமாக கூறினேன். இப்பொழுது அவரது மேற்கண்ட இரு உபதேசங்களும் தேவனுடைய வார்த்தையின் அடிப்படையில் மேலும் இக்காலத்திற்குரிய செய்தியின் அடிப்படையில் தவறு, அவர் அவைகளை தவறாக புரிந்துக்கொண்டு, வேதபுரட்டுக்களை செய்கிறார் என்பதை எழுத இங்கு ஆவியானவரால் நான் வழிநடத்தப்பட்டேன். செய்தியை போதிக்கிறவர்கள் வேதவாக்கியங்களையும் செய்தியாளனையும், செய்தியையும் அறியாமல் இருந்து இதோ செய்தி இங்கே இப்படி, அங்கே அப்படி ; தேவனுடைய வார்த்தை இப்படி, அப்படி சொல்லுகிறது என்று உபதேசித்தாலும் ; மாயையை பின்பற்றி, வீணானவைகளை தகாத சிந்தையோடு, தங்கள் லௌகிக ஞானத்தினால், சுயபுத்தியின் மேல் சார்ந்து, சுய விளக்கம் கொடுத்து, வீணாய் போனார்கள். விசுவாசிகளும் புத்திமதியை ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்கிறார்கள். அவர்களுடைய மீறுதல்கள் பெருகி நாளுக்குநாள் அவர்களுடைய சீர்கேடுகளும் அதிகரித்துக்கொண்டே செல்கிறது. இதுதான் இந்நாட்களில் நான் நமது மக்கள் மத்தியில் கண்ட காட்சி.

5. எனது மார்ச் 2019, நிருபத்தில் இந்த யூடியூப் செய்தி பரிமாற்ற செயலி வேதவாக்கியங்களின் அடிப்படையில் ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல. இது தேவனுடைய பிரமானத்திலிருந்து ஊழியங்களை திசைதிருப்ப சாத்தான் எடுத்துக்கொண்ட செய்தியை பிரசங்கிக்கும் நவீன வழிமுறையாகும் என நான் எழுதியிருந்ததை மீண்டும் சற்று சுருக்கமாக இங்கு தருகிறேன். பிரயோஜனப்படுத்திக்கொள்ளுங்கள்.

6. தேவன், கிறிஸ்துவின் சுவிசேஷத்தை பிரசங்கிக்க, அவருக்கென்று ஒரு திட்டத்தை வைத்துள்ளார். ஒருபோதும் அவர் அதிலிருந்து மாறுவது கிடையாது. சுவிசேஷத்தை பிரசங்கிப்பதற்கென ஆதியிலே தேவன் சூரியனையோ, சந்திரனையோ, நட்சத்திரங்களையோ, மற்றும் இதர கிரகங்களையோ, காற்றையோ, தேவதூதர்களையோ, இயந்திரங்களையோ நியமித்திருக்கலாம். ஆனால் அவர் அப்படி ஏற்படுத்தவில்லை. நியமிக்கவும் இல்லை. அதற்கென்று அவர் மனிதனை மாத்திரமே நியமித்தார். அதிலிருந்து அவர் ஒருபோதும் மாறுவது இல்லை. ஏனென்றால் அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர். ஆனால் தேவனுடைய இந்த திட்டத்தை முறியடிக்கவே சாத்தான் தொலைக்காட்சி என்ற தொல்லைக்காட்சியையும், இதர வாட்ஸ்ஆப், யூடியூப், பேஸ்புக், டுவிட்டர் போன்ற இணையதளங்களை உபயோகிக்கிறான். நீங்களும் அதில் பங்கு கொள்கிறீர்கள். நீங்கள் செய்யும் இந்த நவீன மாயையான சுவிசேஷம், தேவனுடைய பார்வையில் நலமாக இருக்குமோ என்று உங்களை நீங்களே கீழ்கண்ட எனது நிருபத்திலிருந்து சோதித்து பாருங்கள். சத்தியம் உங்களை விடுதலையாக்கும்.

7. அவர், அவரால் அனுப்பப்பட்டவனிடத்தில் சுவிசேஷ பிரசங்கத்தை ஒப்புவித்தபோது, அவன் அதை பிரசங்கிக்க மற்றொரு சாதனத்தை உபயோகிக்க கூடாது. அவனே நேரடியாக மக்கள் மத்தியில் பிரசங்கிக்க வேண்டும். அவன் ஒலிபெருக்கியை (Mike) உபயோகிக்கிறான். இது பிரசங்கிப்பவரின் சத்தத்தை கேட்பவர்கள் நன்கு கேட்கத்தக்கதாக சத்தத்தை கூட்டிக் குறைக்கிறது. தேவன் தம்முடைய சுவிசேஷத்தை எடுத்து செல்ல, தம்முடைய சுயவழியை வைத்திருக்கிறார். நாம் ரோமர்.10:13-17 வசனங்களை தியானிக்கும் போது, சமாதானத்தை கூறி நற்காரியங்களை சுவிசேஷமாய் அறிவிக்க ஒருவன் அனுப்பப்படவேண்டும். கவனியுங்கள் கரங்களில் பரிசுத்த வேதாகமத்தை எடுத்தவன் எல்லாம் அனுப்பப்பட்டவன் அல்ல. ஸ்தாபன சபைகளில் ஊழியனாக இருந்துகொண்டு கூலிக்கு மாரடிக்கும் நபர்கள் எல்லாம் அனுப்பப்பட்டவர்கள் அல்ல. வேதாக கல்லூரிகளில் படித்து பட்டம் பல பெற்ற ஊழியக்காரர்கள் எல்லாம் தேவனால் அனுப்பப்பட்டவர்கள் அல்ல. மாறாக அவர்கள் அனைவரும் அவர்கள் சார்ந்திருக்கும் ஸ்தாபன சபைகளால் அனுப்பப்பட்டவர்கள். அதற்காக அவர்களுக்கு ஸ்தாபனங்களே கூலி கொடுக்கிறது. ஆனால் அனுப்பப்பட்டவன் தேவனால் தெரிந்தெடுக்கப்பட்டு, அவரால் அனுப்பப்பட்டவனாக இருக்க வேண்டும். அவ்வாறாகவே தேவனால் அனுப்பப்பட்டவர்களே பிரசங்கிக்க முடியும். இயேசு தான் தெரிந்துக்கொண்ட சீஷர்களை இரண்டு இரண்டு பேராக அனுப்பி, ராஜ்யத்தின் நற்செய்தியை உபதேசிக்கவும்,

பிரசங்கிக்கவும் அனுப்பினார். (லூக்.10:1) பரிசுத்த வேதாகமத்தில் நாம் யாராவது தன் சுய இச்சையின்படியே கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தை பிரசங்கித்ததாக காணமுடியாது. ஆனாலும் ஒரு சிலர் பிரசங்கித்தார்கள், அற்புத அடையாளங்களை செய்தார்கள். ஆனால் அவர்களை அவர் அனுப்பவில்லை. ஆதலால் நான் உங்களை அறியேன் என்றார். நீர் என்னை அனுப்பினது போல் நானும் அவர்களை உலகத்தில் அனுப்புகிறேன் என்றார். (யோ.17:8,21,18) இவர்களுக்கு ஆதரவாக பரிசுத்த ஆவி அனுப்பப்படுகிறார். பிதா அனுப்பப்போகிற தேற்றரவாளாகிய பரிசுத்த ஆவியே எல்லாவற்றையும் உங்களுக்கு போதித்து நான் உங்களுக்கு சொன்ன எல்லாவற்றையும் நினைப்பூட்டுவார். (யோ.14:26) ஆக அனுப்பப்பட்டவர்கள் பிரசங்கித்தார்கள். தங்கள் சொந்த கருத்தை பிரசங்கிக்கவில்லை. தாங்கள் சார்ந்துள்ள ஸ்தாபன சபை கோட்பாடுகளை பிரசங்கிக்கவில்லை. ஒருவர் செய்த பிரசங்கத்தை வைத்து பிரசங்கிக்கவில்லை. கல்லூரிகளில் படித்த பாடங்களை ஜனங்கள் மத்தியில் பிரசங்கிக்கவில்லை. மாறாக அவர்களுடைய பிரசங்கங்கள் யாவும் கர்த்தருடைய வார்த்தையிலிருந்தே வந்தது. வாசலூக்கு முன் நிற்க இடம் போதாதபடிக்கு அநேகர் கூடி வந்திருந்தார்கள். அவர்களுக்கு இயேசு வசனத்தை போதித்தார். (மாற்.2:2) அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு கர்த்தருடைய வார்த்தையை / தேவவசனத்தை தைரியமாய் சொன்னார்கள். கர்த்தருக்குள் திடன் கொண்டு பயமில்லாமல் திருவசனத்தை அதிகமாய் துணிந்து சொன்னார்கள். (பிலி.1:14) தேவ வசனத்தை போதித்தார்கள். (எபே.13:7) கவனியுங்கள். கர்த்தருடைய வசனமோ என்னென்றைக்கும் நிலைத்திருக்கும். உங்களுக்கு சுவிசேஷமாய் அறிவிக்கப்பட்டு வருகிற வசனம் இதுவே. (1பேது.1:25) மேலும் கவனியுங்கள். பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்ட பரிசுத்த ஆவியினாலே சுவிசேஷத்தை பிரசங்கித்தார்கள். (1பேது.1:12) இன்று யார் பரிசுத்த ஆவியினால் பிரசங்கிப்பது? பரிசுத்த ஆவியை பெறாத திரித்துவ ஸ்தாபன சபை ஊழியர்கள் எப்படி பரிசுத்த ஆவியினால் பிரசங்கிக்க முடியும்? பரிசுத்த ஆவி இவர்களிடத்தில் இருந்தால் சத்திய ஆவி இவர்களை சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்தியிருக்குமே? அப்பொழுது இவர்கள் பாவமன்னிப்பு கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் என்று பிரசங்கித்திருப்பார்களே? கர்த்தராகிய இயேசு கிறிஸ்து ஒருவரே மெய்யான தேவனும் நித்திய ஜீவனுமாய் இருக்கிறார் என்ற வெளிப்பாடு இவர்களுக்கு கிடைத்திருக்குமே? ஆக திரித்துவ ஸ்தாபன ஊழியக்காரர்கள் யாவரும் தேவனால் / கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் அனுப்பப்படவில்லை. அவர்கள் தங்கள் ஸ்தாபன கல்லூரிகளில் கற்றுக்கொண்டு வந்து, பெற்ற ஞானத்தை சுவிசேஷமாய் பிரசங்கிக்கிறார்கள்.

8. இப்பொழுது தேவனால் அனுப்பப்பட்டவன் பிரசங்கிக்கும் போது பரிசுத்த ஆவி அவனோடு இடைபடுகிறார். தேவன் தம்முடைய வார்த்தையை அவன் வாயில் வைக்கிறார். தேவன் தம்முடைய வார்த்தையை உன் வாயில் வைக்க, நீ ஜனங்களுடைய செவிகளில் தேவனுடைய வார்த்தையை போடுகிறாய். ஆக கிறிஸ்துவின் சுவிசேஷத்தை பிரசங்கிப்பதில் மூன்று பேர் பங்கு கொள்கிறார்கள். முதலாவது தேவன், இரண்டாவது அனுப்பப்பட்ட நபரோடு தேவன் இடைபடுகிறார். தம்முடைய வார்த்தையை அவன் வாயில் வைக்கிறார், மூன்றாவது உன்னால் பேசப்பட்ட வார்த்தையை கேட்கும் ஜனங்கள். ஆக தேவன் – நீ (ஊழியக்காரன்) - ஜனங்கள். அனுப்பப்பட்டவர்கள் தங்கள் வாயின் வார்த்தை மூலமாகவே ஜனங்களிடம் பரிமாற்றம் / தொடர்பு கொள்ளுகின்றனர். இப்பொழுது தேவனால் ஒருவன் சுவிசேஷத்தை பிரசங்கிக்க அனுப்பப்பட்டு, தேவன் அனுப்பப்பட்டவன் வாயில் வார்த்தையை வைக்க, அனுப்பப்பட்டவனாகிய அவன் பிரசங்கிக்க, அதை கேட்ட ஜனங்கள் விசுவாசத்தோடு கேட்டபடியினால் அது அவர்களுக்கு பிரயோஜனப்பட்டது. சத்தியமுள்ளவரை அறிந்துகொள்வதற்கு தேவனுடைய குமாரன் வந்தார். இந்த குமாரனாகிய இயேசு கிறிஸ்துவே சத்தியமுள்ளவர். இவரே மெய்யான தேவனும் நித்திய ஜீவனுமாய் இருக்கிறார். அப்படியானால் குமாரனாகிய இயேசு கிறிஸ்துவே கர்த்தர், அவரே மெய்யான தேவன். இவர் ஜீவனுள்ள தேவன், நித்திய ராஜா என கேட்ட ஜனங்கள் புரிந்துக்கொண்டு விசுவாசித்தார்கள். (யோ.5:20, எரே.10:10) கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை. நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமேயல்லாமல் வெறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை. ஆதலால் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற வேண்டும் என்று பிரசங்கிக்கப்பட்டதை விசுவாசித்தவர்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் தங்கள் பாவமன்னிப்புக்கென்று அன்று சுமார் 3000 பேர் ஞானஸ்நானம் பெற்றார்கள். அவ்வாறாக இரட்சிக்கப்பட்டவர்களைத்தான் கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார். அவர்கள் நித்திய ஜீவனுக்கென்று நியமிக்கப்பட்டவர்கள். (அப்.13:48) ஆனாலும் இடறுகிறதற்கென்றே ஒரு கூட்டம் இருந்தது. அவர்கள் இடறினார்கள். (1பேது.2:8) ஏன் இடறினார்கள்? பிதாவுக்கும் குமாரனுக்கும் உள்ள ஐக்கியத்தை இவர்களால் புரிந்துக்கொள்ள முடியவில்லை. பிதா ஒரு தனி நபர், குமாரன் ஒரு தனி நபர், பரிசுத்த ஆவி ஒரு தனி நபர் ஆக தேவத்துவத்தில் மூவர் உண்டு. பிதா குமாரன் பரிசுத்த ஆவி என விசுவாசித்து இடறினார்கள். ஆனால் கவனியுங்கள் : பிதா தவிர வேறொருவனும் குமாரனை அறியான். குமாரன் தவிர வெறொருவனும் பிதாவை அறியான். பிதா, சீமோன் குமாரனுக்கு, இயேசுவே ஜீவனுள்ள தேவனுடைய குமாரன் என வெளிப்படுத்தினார். (மத்.16:16) இயேசு தன்னைக்கண்டவன் பிதாவைக்கண்டான் என பிலிப்புக்கு வெளிப்படுத்தினார். (யோ.14:9) இங்கு நாம் தியானித்ததை விசுவாசித்து, அப்படியே நான் ஏற்றுக்கொள்ளுகிறேன், தேவன் ஒருவர். அவருடைய நாமம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து. அவரே பிதா குமாரன் பரிசுத்த ஆவிக்குரியவர். தேவத்துவத்தில் மூவர் இல்லை. ஒரே நபர். தேவத்துவம் பரிபூரணமாக கிறிஸ்துவாகிய அவருக்குள் இருக்கிறது. ஆனால் திரித்துவ ஸ்தாபன மக்கள் இதில் இடறுகிறார்கள். No, No எங்களுக்கு மூவர் உண்டு. பிதா ஒருவர், குமாரன் ஒருவர், பரிசுத்த

ஆவி ஒருவர் என்ற பிசாசின் வியாக்கியானத்தை முன்வைத்து அதில் இடறுகிறார்கள். திரித்துவ ஸ்தாபன சபை ஊழியர்களை நம்பி மக்கள் மோசம் போனார்கள். ஏனென்றால் அவர்கள் அதற்கென்றே நியமிக்கப்பட்டவர்களுமாயிருக்கிறார்கள். கவனியுங்கள் பிரசங்கம் ஒன்றுதான். அது தேவனுடைய வார்த்தையிலிருந்து வந்தது. அதை ஒரு சாரார் விசுவாசித்தார்கள். மற்றொரு சாரார் விசுவாசிக்கவில்லை. ஏனென்றால் தேவபக்திக்கேதுவான சத்தியத்தை அறிகிற அறிவும், விசுவாசமும் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்கே உண்டாகும். (தீத்.1:3)

9. இப்பொழுது கவனியுங்கள் விசுவாசித்தவர்கள் தேவனை தொழுதுகொள்ளுகிறார்கள். மனந்திரும்புகிறார்கள். தங்களுடைய பழைய சுபாவத்திற்கு, அக்கிரமங்களுக்கு, செய்த பாவங்களுக்கு மனந்திரும்புகிறார்கள். அதன்பின் தேவனிடத்தில் பாவ அறிக்கை செய்கிறார்கள். பாவத்தினாலே பிறந்து, பாவத்திலே வளர்ந்து, நீண்ட வெள்ளை அங்கி அணிந்து தன்னை பரிசுத்தவான்களாக்கினவர்களும், வெள்ளையடிக்கப்பட்ட சுவர்களிடமும் சென்று பாவ அறிக்கை செய்யவில்லை. அவர்கள் அந்த நபர்களை அடையாளம் கண்டுக்கொண்டார்கள். ஆதலால் தேவனிடத்தில் பாவஅறிக்கை செய்து, ஒப்புரவானார்கள். அதன்பின் பாவமன்னிப்புக்கென்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினாலே ஞானஸ்நானம் பெறுகிறார்கள். பரிசுத்த ஆவியை பெறுகிறார்கள். ஆத்தும இரட்சிப்பை அடைகிறார்கள். (அப்.2:38) இவ்வாறாக இரட்சிக்கப்பட்டவர்களை கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார்.(அப்.2:47) இதுவரை சமாதானத்தைக்கூறி நற்காரியங்களை சுவிசேஷமாய் அறிவித்து இரட்சிப்பை பிரசித்தப்படுத்தின அனுப்பப்பட்டவர்கள் பணி முடிந்தது. இதுவும் சுவிசேஷகர்களுடைய பணிதான். ஆனால் சுவிசேஷத்தை பிரசிங்கிக்க இவர்கள் தேவனால் அனுப்பப்பட்டார்கள். (ஏசா.52:7, ரோ.10:15, நாகூம்.1:15)

10. அடுத்து என்ன நடக்கிறது என்று கவனியுங்கள். இப்பொழுது இவ்வாறாக இரட்சிக்கப்பட்டவர்களோடு ஐந்து வகை ஊழியத்தில் உள்ள பணியாளர்கள் இடைபடுகிறார்கள். இவ்வாறாக இரட்சிக்கப்பட்டவர்கள் அனைவரும் தேவனுடைய குமாரனை பற்றும் விசுவாசத்திலும், அறிவிலும் ஒருமைபட்டவர்களாகி கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குதக்க பூரண புருஷராகும்வரைக்கும், பரிசுத்தவான்கள் பூரணப்படும் பொருட்டு அதாவது கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது இயேசு கிறிஸ்துவினுடைய ஏழு திவ்வியசுபாவத்தில் பங்கு பெற்று (விசுவாசம், வல்லமை, ஞானம், தன்னடக்கம், பொறுமை, தேவபக்தி, சகோதர சிநேகம் (2பேது.1:5-7) இவ்வாறாக சபை பூரணப்படும்வரை சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும் கர்த்தர் சிலரை அப்போஸ்தலராகவும், தீர்க்கதரிசிகளாகவும், சுவிசேஷகராகவும், மேய்பராகவும், போதகனாகவும் ஏற்படுத்தினார். (எபே.4:11-13) இப்பொழுது இந்த திருப்பணிவிடையாளர்கள் இரட்சிக்கப்பட்டவர்களோடு இடைபடுகிறார்கள், அவர்களுக்கு ஆவிக்குரிய ஆலோசனைகளை கூறுகிறார்கள். சகோதரரே நீங்கள் வார்த்தையினாலாவது (Word) நிருபத்தினாலாவது (Epistle) உங்களுக்கு உபதேசித்த முறைமைகளை கைக்கொள்ளுங்கள் என்கிறார்கள். (2தெச.2:15, 3:14) இந்த ஐந்து வகை சபைபக்திவிருத்திக்கடுத்த ஊழியங்கள் வாயிலாக, தேவனுடைய வார்த்தை பிரசங்கிக்கப்படுகிறது. அதோடு மாத்திரமல்ல நிருபங்களும் எழுதப்படுகிறது. அதாவது சுவிசேஷ நற்செய்தி ஒருபுறம், மறுபுறம் உபதேசங்களைக் கொண்ட நிருபம். வாயின் வார்த்தைகளால் செய்தி பிரசங்கிக்கப்படுகிறது. அதன்பின் உபதேசங்களைக் கொண்டு நிருபங்கள் எழுதப்படுகிறது. இவ்வாறாகத்தான் புதிய ஏற்பாட்டில் சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டதையும், அதன்பின் நிருபங்கள் எழுதப்பட்டதையும் நாம் காண்கிறோம். இந்த பணியை செய்ய காலேப் யோசுவா கர்த்தரால் தெரிந்துகொள்ளப்பட்டு சுவிசேஷகனாக நியமிக்கப்பட்டு இருக்கிறார். நீங்கள் இதை புரிந்துக்கொள்வீர்கள் என நினைக்கிறேன். என்னுடைய சுவிசேஷ ஊழியம் / பிரசங்கம் மற்றும் நிருபங்கள் எழுதுவது இதனால்தான் 1978 முதல் இதுவரை தடைபடவில்லை.

11. இப்பொழுது இங்கு சற்று கவனியுங்கள்:
தேவன் நேரடியாக அனுப்பப்பட்ட பிரசங்கியோடு இடைப்பட்டு அவனுடைய வாயில் தம்முடைய வார்த்தையை வைக்கிறார். ஒரு பாஸ்டர் அனுப்பப்பட்டவன் அல்ல. சுவசேஷ ஊழியத்திற்கும் பாஸ்டருக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. பாஸ்டர் என்பவன் மந்தையை மேய்க்கும் ஒரு மேய்ப்பன் மாத்திரமே. நான் ஒரு பத்திரிக்கையில் “மறைந்துக்கிடக்கும் சத்தியங்கள்” குறித்து ஒரு பாஸ்டர் பேசப்போவதாக எழுதியிருந்தது. பாருங்கள் இது ஒரு மேய்ப்பனுக்கு கொடுக்கப்பட்ட பணி அல்ல. கர்த்தராகிய ஆண்டவர் தீர்க்கதரிசிகளாகிய தம்முடைய ஊழியக்காரர்களுக்கு தம்முடைய இரகசியங்களை வெளிப்படுத்துகிறார் என ஆமோஸ்.3:7, எரே.27:18 ல் வாசிக்கிறோம். ஆக இந்த மேய்ப்பன் தன்னுடைய அழைப்பை அறியாதவன். ஒரு கள்ளகபடமுள்ள வேலையாள். மேலும் இவர், தான் தேவனுடைய வார்த்தைகளை ஆராய்ச்சி செய்வதாக கூறுகிறார். இதுவும் தவறு. ஒருவன் தேவனுடைய வார்த்தையை ஆராய்ந்து பார்க்க மாத்திரமே செய்யலாம். தேவனுடைய வார்த்தையை ஆராய்ச்சி செய்ய முடியாது. அவ்வாறு செய்கிறவன் பிசாசு. அனுப்பப்பட்ட பிரசங்கி, தேவனிடமிருந்து பெற்ற, அவர் அவன் வாயில் வைத்த வார்த்தைகளை நேரடியாக மக்களிடம் பிரசங்கிக்கிறான். நித்திய ஜீவனுக்கென்று நியமிக்கப்பட்டவர்கள் விசுவாசிக்கிறார்கள். இடறுகிறதற்கென்று நியமிக்கப்பட்டவர்கள் இடறுகிறார்கள். ஏனென்றால் நமது மத்தியில் விசுவாசிகள், அவிசுவாசிகள், பாவனை விசுவாசிகள் உண்டு. அடுத்து உபதேசங்கள் /

ஆலோசனைகள் நிருபங்கள் வாயிலாக எழுதப்படுகின்றன. இதை வாசிக்கிறவனும், கேட்கிறவனும் எழுதியிருக்கிறவைகளை கைக்கொள்ளுகிறவர்களும் பாக்கியவான்கள்.

12. மேற்கண்ட மூன்று காரியங்களில் இதன் நடைமுறைகளை / தொடர்பு முறைகளை சற்று கவனியுங்கள். Mode of Transmit. Transmit என்றால் இடை நின்று தொடர்பு படுத்துவது. தேவனுக்கும் – செய்தியை கேட்பவர்களுக்குமிடையில் – அனுப்பப்பட்டவனின் வாயின் வார்த்தை. அதாவது தேவனுக்கும் அவருடைய வார்த்தைகளை கேட்பவருக்குமிடையில் அனுப்பப்பட்டவர்கள் நின்று தொடர்புபடுத்துகிறவர்களாக இருக்கிறார்கள். தேவன் தமது வார்த்தையை அனுப்பப்பட்டவன் வாயில் போடுகிறார் தேவன் நேரடியாக கேட்பவரோடு இடைபடுவதில்லை. அனுப்பப்பட்டவன் பிரசங்கிக்கிறான். ஜனங்கள் கேட்கிறார்கள். தேவனுக்கும் – எழுதுகிறவனுக்கும்; எழுதுகிறவனுக்கும் விசுவாசிக்கிறவர்களுக்கும் இடையில் நிருபங்கள் இடம் பிடிக்கிறது. தேவன் தூண்டுகிறார். ஆவியானவர் பேனாவை பிடித்து ஊழியக்காரனை நிருபங்கள் எழுதவைக்கிறார். அவன் எழுதுகிறான். ஜனங்கள் விசுவாசிக்கிறார்கள், நிராகரிக்கவும் செய்கிறார்கள், அது அவர்களுடைய சுயாதீனம். நான் நிருபமாக எழுதுகிறவைகளை நீங்கள் விசுவாசிக்கிறீர்களோ, இல்லையோ அது குறித்து எனக்கு கவலையில்லை. ஆனால் நான் நிருபங்களை எழுதித்தான் ஆக வேண்டும். நான் வார்த்தையை விதைத்து நீர் பாய்ச்ச வேண்டும். விளைச்சலைக் கொடுப்பவர் தேவன்.

13. இப்பொழுது நீங்கள் இங்கு மிக முக்கியமாக கவனிக்க வேண்டியது என்னவென்றால் : இந்நாட்களில் நமது மத்தியில் ஊழியக்காரர்களோ, ஆட்டுத்தோலை போர்த்திய ஓநாய்களாகவே இருக்கிறார்கள். ஆதலால் தான் தேவன் ஊழியக்காரர்களோடு இடைபடுவதில்லை. சாத்தான் மாத்திமே அவர்களோடு இடைபடுகிறான். ஒருவன் சாத்தான் குடியிருக்கும் இடத்தில் இருந்துகொண்டு நான் நல்லவன், உத்தமன், என்னை பாருங்கள், என் அழகை பாருங்கள் என் பிரசங்கத்தை பாருங்கள். ஆனால் என் கிரியைகளை மாத்திரம் பார்க்காதீர்கள். உங்களுக்கு பிரசங்கம் தான் முக்கியம் என்று கூறினால், அவன் இருக்கும் இடத்திற்கு போகாதீர்கள், அவனுக்கு செவிசாய்காதிருங்கள். அங்கு கொடிதான வஞ்சகம் உண்டு. இவர்கள் கள்ளகபடமுள்ள வேலையாட்களாகவே இருக்கிறார்கள். இவர் தொலைக்காட்சி, வாட்ஸ்ஆப், யூடியூப், பேஸ்புக், டுவிட்டர் போன்ற நவீன தொழில்நுட்ப இணையதளங்கள் மூலமாக சீர்கேடுகளில் ஈடுபடுகிறார்கள், பிறரை ஈடுபடவும் வைக்கிறார்கள். நீங்கள் நித்திய ராஜ்யத்திற்குள் பிரவேசிப்பதில்லை. பிறரையும் பிரவேசிப்பதற்கு தடை செய்கிறீர்கள். நீங்கள் இதுதான் சரி என்று நினைத்து தவறானதை பற்றிக்கொள்கிறீர்கள். ஆக நீங்கள் ஜனங்களோடு மேற்கண்ட இணையதளங்கள் வாயிலாக இடைபடுகிறீர்கள். நீங்கள் ஜனங்களோடு நேரடியாக ஈடுபடுவதற்கு பதிலாக உங்கள் ஸ்தானத்தில் மேற்கண்ட இணையதளங்களை வைத்து அதன் வாயிலாக தேவனுடைய செய்தியை அனுப்புகிறீர்கள். அதாவது தேவன் – நீங்கள் – உங்களுக்கு பதிலாக இணையதளங்கள், அதன் வாயிலாக செய்தி / தேவனுடைய வார்த்தை ஜனங்களை சென்றடைகிறது. இது தேவனுடைய பிரமாணத்திற்கு, அவர் சுவிசேஷத்தை ஜனங்களுக்கு எடுத்துச்செல்ல கொண்டுள்ள முறைமைகளுக்கு மாறானது மற்றும் விரோதமானது. நீங்கள் தேவனுடைய வார்த்தையை Modern way of Transmitting மூலம் ஜனங்களிடம் கொண்டு செல்கிறீர்கள். பாருங்கள் உங்களுக்கு பதிலாக இணையதளங்களை ஈடுபடுத்த பிசாசு உங்களை திசைதிருப்பி விட்டான். தேவன் உங்களை நீ இதை பிரசங்கி என்று சொல்லும் போது, நீங்கள் மற்றொன்றை கொண்டு, உங்களுக்கு கூறாததைக் கொண்டு பிரசங்கிக்கிறீர்கள். அங்குதான் தவறு நடக்கிறது. தேவன் உங்களிடம் நீ இதை செய் என்று கூறினாள் நீங்கள் மற்றொருவரைக் கொண்டு தேவன் சொன்னதை செய்து நான் நீர் சொன்னதை செய்துவிட்டேன் என்று கூறுகிறீர்கள். அது கீழ்படியாமையின் பிள்ளைகளிடத்தில் கிரியை செய்யும் ஆவி. நீங்கள் நூதன சீஷனாக இருக்க கூடாது. கவனியுங்கள் தேவன் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராய் இருக்கிறார். அவர் அன்றைய முறைமைகளில்தான் இன்றும். அதிலிருந்து அவர் மாறுவதில்லை. தேவன் உங்களோடு இடைப்படுகிறார். நீங்கள் ஜனங்களோடு இடைபடுகிறீர்கள். அது வார்த்தை மற்றும் நிருபங்கள் மூலமாகத்தான் இருக்க வேண்டும். நீங்கள் புதிய முறைகளை கையாளுவது தேவனை எதிர்த்து நிற்பதாகும். நீங்கள் சாத்தானுக்கு கூட்டாளியாக இருந்துகொண்டு, அவனோடு இணைந்து அவனுக்காக ஊழியம் செய்கிறீர்கள்.

14. நீங்கள் மேற்கண்ட நவீன இணையதளங்கள் வாயிலாக செய்திகளை / வார்த்தையை Transmit செய்யும் போது உங்களுடைய ஸ்தானத்தில் அந்த நவீன இணையதளங்கள் வந்துவிடுகிறது. ஜீவனில்லாத ஒன்றைக்கொண்டு ஜீவனுடையவர்களிடம் பேசமுடியாது. ஜீவன் உள்ளவரிடம் ஜீவன் உள்ள ஒன்றே பேசவேண்டும். நீங்கள் உயிரற்ற கீதவாத்தியங்களாக இருக்கிறீர்கள். அதுகூடாது. உங்களுடைய நவீன இணையதளங்கள் யாவும் தீமையானது. இவைகள் யாவும் நவீன தொழில்நுட்ப சீர்கேடுகள். இப்படிப்பட்ட சீர்கேடுகளைக்கொண்டு தேவனுடைய வார்த்தையை மக்களிடம் எடுத்துச்செல்வதா? தேவனுடைய வார்த்தையை எடுத்துச்செல்ல ஒரு மனிதனையே மனிதனுடைய நிருபங்களையே தேவன் அங்கீகரிக்கிறார். தேவன் தம்முடைய சாயலாகமும், ரூபத்தின் படியேயும் மனுஷனை சிருஷ்டித்தார். அவனோடு தொடர்புகொள்ள, தேவன் அவரது சாயலாகவும், ரூபத்தின்படியேயும் சிருஷ்டிக்கப்பட்ட ஒரு மனிதனாகவே இருப்பான். இதை விட்டு, மனிதனோடு தொடர்பு கொள்ள ஒரு ஜீவனற்ற ஒன்றை தேவன் உபயோகிப்பதில்லை.

15. முடிவாக இதுகுறித்து வேதவாக்கியங்களுக்கடுத்த என் கருத்து என்னவெனில் : நீ தேவனிடத்திலிருந்து ஜனங்களுக்கு ஒரு செய்தியை கொண்டுவருவாயாகில் உனக்கும், தேவனுடைய செய்தியை உன் வாயிலிருந்து கேட்கும் ஜனங்களுக்கும் மத்தியில் உன் வாயின் வார்த்தை மாத்திரமே இருக்க வேண்டும். அத்துடன் நீ எழுதும் நிருபங்கள். இதுவே வேத பூர்வமானது. ஆக உங்கள் நவீன இணையதளங்கள் அனைத்தும் பிசாசினுடையதே. ஆதலால் எனக்கு பிரியமானவர்களே. நீங்கள் உங்கள் இணையதளங்கள் வாயிலாக பிசாசுக்கே ஊழியம் செய்கிறீர்கள். நீங்கள் பிசாசினால் எடுத்து உபயோகப்படுத்தும் கருவியாக இருக்கிறீர்கள். பிசாசு உங்களைக்கொண்டு தேவனுக்கடுத்த காரியங்களை, முறைமைகளை தாறுமாறாக்குகிறான். ஆக தேவனுடைய வார்த்தையை செய்தியை சுமர்ந்துவரும் உங்களுக்கும், செய்தியை கேட்கும் ஜனங்களுக்கும் ஒரு Transmit ஏஜென்சியாக உங்கள் இணையதளங்கள் இருக்க முடியாது. ஆனால் The seeds will goin Newspapers, Reading Materials, until every predestinated seed of God was heard it (Q & A.172, Page.724, Para.179)

16. இதுகுறித்து மோசேக்கடுத்த காரியங்களை ஒரு எடுத்துக்காட்டுக்காக இத்துடன் இணைத்து பார்ப்போம். யாத்.4அதிக்கு வருவோம். **மோசே :** நான் வாக்கு வல்லவன் அல்ல. நான் திக்குவாயும், மந்தநாவும் உள்ளவன். **தேவன் :** நீ போ, நான் உன் வாயோடேயிருந்து நீ பேச வேண்டியதை உனக்கு போதிக்கிறேன். **மோசே :** ஆண்டவரே நீர் அனுப்பச்சித்தமாய் இருக்கிற வேறுயாரையாகிலும் அனுப்பும். **தேவன்:** நான் உன் வாயிலிருந்து நீ செய்ய வேண்டியதை உனக்கு உணர்த்துவேன். நீ ஆரோனுக்கு தேவனாயிருப்பாய் அவன் உனக்கு வாயாக இருப்பான். கவனியுங்கள் : மோசேக்கு பதிலாக அவன் ஸ்தானத்தில் ஆரோன். ஆரோன் மோசேயின் வார்த்தைகளைக் கொண்டு அந்த ஜனங்களிடம் பேசுகிறான். நீங்கள் ஆரோன் ஸ்தானத்தில் உங்கள் நவீன இணையதளங்களைக்கொண்டு செயல்படுகிறீர்கள். நாம் என்ன செய்கிறோம்? தேவன் நம்மோடு இடைபடுகிறார். நாம் நவீன இணையத்தளங்களைக்கொண்டு ஜனங்களோடு இடைபடுகிறோம். ஆனால் தேவனோ மனிதர்களைக்கொண்டு மனிதர்களோடு இடைபடுகிறார்.

17. வானங்களில் உள்ளவைகள் கர்த்தரை துதித்தாலும், தூதர்களாகிய அவருடைய சேனைகள், சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், வானாதி வானங்கள் ஆகாய மண்டலத்தில் உள்ள தண்ணீர்கள், பூமியில் உள்ளவைகளில் மகா மச்சங்கள், சகல ஆழங்கள், அக்கினி, கல்மழை, உறைந்த மலை, மூடுபனி, பெருங்காற்று, மலைகள் மேடுகள், கனிமரங்கள், கேதுருமரங்கள், காட்டுமிருகங்கள், நாட்டு மிருகங்கள், ஊரும் பிராணிகள், இறகுள்ள பறவைகள் போன்றவைகள் யாவும் கர்த்தரை தூதித்தாலும், சுவிசேஷகத்தை பிரசங்கிக்கும் பொறுப்பை தேவன் அவர்களிடத்தில் ஒப்புவிக்கவில்லை. மாறாக தமது சாயலாகவும், ரூபத்தின்படியேயும், சிருஷ்டிக்கப்பட்ட நித்திய ஜீவனை உடைய மனிதரிடமே ஒப்படைத்தார். ஆனால் நாமோ தேவனுடைய நியமங்களை முறியடிக்கிறோம். நீங்கள் மக்களை வஞ்சிக்கும் சாத்தானின் கருவிகளாகவே இருக்கிறீர்கள். அங்கு தேவன் – மோசே – ஆரோன் – ஜனங்கள். ஆனால் இங்கோ தேவன் – ஊழியக்காரன் (இவன் கள்ளகபடமுள்ள வேலைக்காரனாகத்தான் இருக்க முடியும்) – நவீன இணையத்தளங்கள் – ஜனங்கள். அன்று சாத்தான் ஏவாளுக்கு சற்று வித்தியாசமான ஆலோசனையைத்தான் கொடுத்தான். இன்று சாத்தான் ஒளியின் தூதனுடைய வேஷத்தை தரித்தவர்களைக்கொண்டு சற்று வித்தியாசமான ஆலோசனையைத்தான் கொடுத்துள்ளான். ஏழாம் சபைக்கால தூதன் – தீர்க்கத்தரிசி – ஏழாம் சபைக்கால தூதனுடைய செய்தி என்று கூறிக்கொண்டு சாத்தான் தன் தூதர்களைக்கொண்டு நவீன இணையதளங்கள் மூலமாக விசுவாசிகளை வஞ்சிப்பதை கண்கள் உள்ளவர்கள் காணத்தவறமாட்டார்கள். வஞ்சிப்பவனையும் அடையாளம் கண்டு கொள்வார்கள்.

18. மேற்கண்ட நவீன இணையதளங்களை தகவல் தொடர்பு, விளம்பரம் போன்றவைகளுக்கு ஓகே. ஆனால் அவைகள் தேவனுடைய வார்த்தையை சுமர்ந்து செல்லும் மனுஷனுக்கு ஈடாக முடியாது. ஆனால் இந்த ஹாலிவுட் முறைமைகளை, பிரசங்கத்தை, சுவிசேஷத்தை விட்டு விலகுங்கள். அது தீது. எழுதப்பட்ட வார்த்தைகளை எடுத்துச் செல்வதற்கு இந்த இணைய தளங்களை பயன்படுத்தலாம். அதாவது தேவனுடைய வார்த்தையைக்கொண்ட பரிசுத்த வேதாகமத்திலிருந்து அநேக உபதேசங்கள், நற்காரியங்களை நீங்கள் எடுத்து அதை இந்த இணையத்தளத்தின் மூலமாக பிரகடணப்படுத்தலாம். அதில் தவறு இல்லை. ஆனால் நேரடியாக பேசப்படும் வார்த்தைகளை நீங்கள் இந்த இணையதளத்தின் மூலமாக எடுத்துச்செல்ல முடியாது. **இயேசுவே வாரும்** எழுதப்பட்ட நிருபத்தை இந்த நவீன இணையதளங்கள் வாயிலாக நான் எடுத்துச் செல்கிறேன். அதாவது உரைக்கப்பட்ட வார்த்தை, எழுதப்பட்ட வார்த்தையாகி அந்த வார்த்தைகளை நீங்கள் மேற்கண்ட இணையதளங்களில் நீங்கள் எடுத்துசெல்லலாம். ஆனால் உரைக்கப்படும் வார்த்தையை நீங்கள் நேரடியாக உங்கள் இணையதளங்களில் எடுத்துச்செல்ல முடியாது. இன்னும் சற்று தெளிவாக கூறப்போனால் உரைக்கப்படும் வார்த்தையை மேற்கண்ட இணையதளங்களில் எடுத்து செல்லாமல், எழுதப்பட்ட வார்த்தைகளை எடுத்துச்செல்லலாம். உரைக்கப்பட்ட வார்த்தை எழதப்பட்ட வார்த்தையாகும் பொழுது நீங்கள் அதனை உங்கள் இணையதளங்களில் எடுத்துச்செல்லலாம். உரைக்கப்பட்ட வார்த்தைகளை நீங்கள் நேரடியாக எடுத்துச்செல்ல முடியாது. அது கூடாது. டிவி ஒரு சாபம் என்று நீங்கள் கூறும்போது அதனை சார்ந்த மேற்கண்ட இணையதளங்களும் சாபம் தானே.

19. மிக்க மன வியாகுலத்துடன், பாரத்துடன், நான் ஒன்றை இங்கு எழுத விரும்புகிறேன். சொல்லப்போனால் ஆவியானவரால் எழுத தூண்டப்படுகிறேன். கடைசி கால செய்தி ஊழியம் என்ற போர்வையின் கீழ் நமது மத்தியில் யூடியூப் மூலம் செய்திகளை பரிமாரிக்கொள்ளும் இருவர் பெயரை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். 1. கோவை சகோ.ராஜா, 2. சென்னை சகோ.ஜீவஜெயம். இந்நாட்களில் இந்த இருவரோடும் ஊழியத்தின் பாதையில் எனக்கு பங்கும் பாத்தியமும் கிடையாது. ஆனால் இவர்களது காரியம் வேதவாக்கியங்களோடும், இக்காலத்திற்குரிய செய்தியோடும் சம்பந்தப்பட்டிருப்பதால், செய்திக்கடுத்த உக்கிராண பொறுப்பு என் மேல் இருப்பதால், இவர்கள் காரியம் தவறு என்பதை எழுத வேண்டியது எனது கடமையாய் இருக்கிறது. இவர்கள் இருவரம் யூடியூப் பெயரில் வேத பிரமாணங்களுக்கு விரோதமாக பிசாசுக்கே ஊழியம் செய்து வருகிறார்கள். இந்த ஊழியத்தில் செலவு ஒன்றும் அதிகம் இல்லாததால் இவர்கள் நாள்முழுவதும் வீட்டில் உட்கார்ந்துக்கொண்டு, யூடியூபை பயன்படுத்தி தேவனுக்கு ஊழியம் செய்கிறோம் என்று கூறிக்கொண்டு, பிசாசுக்கே ஊழியம் செய்து வருகிறார்கள். பிசாசு இவர்களுக்கு லகுவான வழிமுறைகளை திறந்துக்கொடுத்துள்ளான். இவர்கள் வழியில் இன்னும் சிலர் உண்டு. ஆனால் இவர்கள் இருவரும் இந்த யூடியூப் க்கு அடுத்த காரியத்தில் பிரபலமானவர்கள். சகோ.ராஜா குறித்து அநேகர் என்னிடம் முறையிட்டிருக்கிறார்கள். தற்போது ஒரு நிலை ஏற்பட்டுள்ளது. ஆதலால் விமர்சிக்கிறேன். விமர்சிக்கத்தான் வேண்டும். வேறுவழியில்லை. இது ஜனங்களுக்கு இவர்களை குறித்து ஒரு எச்சரிப்பு ஆகும்.

20. ஆயிரம் வருட அரசாட்சி இப்பொழுது நடைப்பெற்றுக்கொண்டிருக்கிறது. நாம் ஆயிரம் வருட அரசாட்சியில் இருக்கிறோம். இதை சகோ.பிரன்காம் கூறுகிறார் என்பதற்கு எடுத்துக்காட்டாக சகோ.ஜீவஜெயம் எடுத்துக்கொண்ட செய்தி **பரலோக மணவாளன் மற்றும் பூமிக்குரிய மணவாட்டியின் வருங்கால இருப்பிடம்.** பக்கங்கள்.45, 46, 48 மற்றும் 91 செய்தியின் நாள்.02.08.1964. இப்பொழுது பக்கம் பக்கமாக செய்தி என்னக்கூறுகிறது என்பதை காண்போம்.

**பக்கம் 45:** ஒரு காரியத்தை இன்னுமாக நான் குறிப்பிடவில்லை. இந்த ஆயிரம் வருட அரசாட்சியானது புதிய பூமியல்ல. ஆயிரம் வருட அரசாட்சியானது வித்தியாசப்பட்டது. **இந்த ஆயிரம் வருட அரசாட்சிக்கு நாம் போகப்போகிறோம்.** (பாருங்கள், இது நாம் எதிர்நோக்கி கொண்டிருக்கும் ஒரு காலத்தை குறிக்கிறது – கா.யோ) ஆனால் அது (ஆயிரம் வருட அரசாட்சி – கா.யோ.) புதிய வானமும் புதிய பூமியும் அல்ல. இல்லை. ஆயிரம் வருட அரசாட்சியானது சற்று இளைப்பாறும் இடமாக இருக்கிறது. ஒரு இளைப்பாறும் காலம். ஆயிரம் வருட அரசாட்சியின் காலத்தை இதனோடு (புதிய வானம் புதிய பூமி – கா.யோ) பொருத்தமுடியாது. ஏனென்றால் உலகத்தை அவர் உண்டாக்கின பின்பு ஏழாம் நாளில் ஏதேனில் அவர் இளைப்பாறியதை குறிக்கும் நிழலாயிருக்கிறது.

**பக்கம்.46 :** கவனியுங்கள். அந்த ஆயிரம் வருட அரசாட்சி ஏழாம் நாளுக்கு உதாரணமாய் இருக்கிறதே தவிர அது ஒரு பரிபூரணமான உலகம் அல்ல. அதன்பின் வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு வருகிறது. இங்கு நியாயத்தீர்ப்பு இன்னுமாக உண்டாயிருக்கிறது. (கவனியுங்கள் இன்னுமாக / Still என்பது வருங்காலத்தை குறிக்கிறது. – கா.யோ) நாம் இன்னுமாக இந்த ஆயிரம் வருட அரசாட்சியில் இருந்துக்கொண்டிருக்கிறோம். (இங்கும் இன்னுமாக / Still என்பது வருங்காலத்துக்கடுத்ததாக இருக்கிறது. – கா.யோ.) இந்த ஆயிரம் வருடம் என்பது ஒரு நாளை குறிக்கிறது. அது ஒரு கால வரம்புக்குள் இருக்கிறது. புதிய பூமியுடன் அதை கலந்து விடாதீர்கள். ஏனென்றால் அது அல்ல. இப்பொழுது இந்த பகுதியை ஆங்கிலத்தில் கவனியுங்கள். The future home of the heavenly Bride Groom and the earthly Bride. Page.30 Last para. This Millennium is a type of the seventh day. (இந்த ஆயிரம் வருட அரசாட்சி ஏழாம் நாளுக்கு எடுத்துக்காட்டாக இருக்கிறது) Then come the White Thorn Judgment. ( அதன்பின் வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு வருகிறது. See, we Still have Judgment (பாருங்கள், நாம் இன்னுமாக நியாயத்தீர்ப்பை கொண்டிருக்கிறோம்) (கவனியுங்கள் இது ஒரு வருங்காலத்தை குறிக்கிறதாக இருக்கிறது. கா.யோ.) We're still in time in the Millennium (நாம் இன்னுமாக ஆயிரம் வருட அரசாட்சி என்ற வேளையில் இருந்துக்கொண்டிருக்கிறோம். இதுவும் வருங்காலத்தை குறிக்கிறதாகயிருக்கிறது. இங்குதான் செய்தியை சகோ.ஜீவஜெயம் தவறாக புரிந்துக்கொண்டார். **இன்னுமாக** என்பதை **இப்பொழுது** என புரிந்துக்கொண்டார். ஒன்றை நிதானிக்க அவரால் முடியவில்லை. அந்த ஞானம் அவருக்கு கொடுக்கப்படவில்லை. அவர் அதை தன் மாம்ச கண்களினால் பார்த்தார். ஏனென்றால் அவருடைய ஆவிக்குரிய கண்கள் திறக்கப்படவில்லை. சகோதரனே, நாம் இன்னுமாக நியாயத்தீர்ப்பை எதிர்நோக்கி கொண்டிருக்கிறோம். அதேபோன்று நாம் இன்னுமாக ஆயிரம் வருட அரசாட்சியை எதிர்நோக்கி கொண்டிருக்கிறோம். மாறாக ஆயிரம் வருட அரசாட்சியை இன்று கொண்டிருக்கவில்லை.

**பக்கம்.48 :** இந்த பக்கத்தில் நான்காவது பத்தியை பற்றிக்கொண்டார். இங்கு "நாம் ஆயிரம் வருட அரசாட்சியில் இருக்கிறோம்" என உள்ளது. இதைக்கொண்டுதான் மிக்க காரசாரமாக சகோதரரர் யூடியூபில் பேசினார். விசுவாசிகளை கண்டித்தார். நாம் இப்பொழுது ஆயிரம் வருட அரசாட்சியில் இருக்கிறோம் என்று கூறும் தீர்க்கத்தரிசியின் செய்தியை உங்களால் ஏற்றுக்கொள்ள முடியாவிட்டால், உங்கள் கரங்களில் உள்ள செய்தி புத்தகங்களை வேறு யாருக்காவது கொடுத்துவிட்டு, ஸ்தாபன சபைகளில் சென்று உட்காருங்கள் என்றார். என்ன ஆணவமான பேச்சு? கவனியுங்கள் 46 வது பக்கம், இரண்டாவது பத்தியில் நாம் இன்னுமாக (Still) இந்த ஆயிரம் வருட அரசாட்சியை எதிர்நோக்கி கொண்டிருக்கிறோம் என கூறிய ஏழாம் சபைக்கால தூதன், அடுத்து உடனே பக்கம்.48 பத்தி 4 ல் நாம் ஆயிரம் வருட அரசாட்சியில் இருக்கிறோம் என்று எப்படி பிரசங்கிக்க முடிந்தது?

நிச்சயமாக இந்த மொழிப்பெயர்ப்பு ஆயிரம் வருட அரசாட்சி நடந்துக்கொண்டிருப்பதாகவே கூறுகிறது. அப்படியானால் செய்தியில் முரண்பாடா? நான் சிந்திக்கலானேன். ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் நிதானித்து பார்க்கிறான். ஆகஸ்ட் 24 ஆம் தேதி மாலையிலிருந்து இரவு வரை சிந்தித்தேன். வழி திறக்கப்படவில்லை. 25 ஆம் தேதி காலை மறுபடியும் இதுகுறித்து தியானிக்க ஆரம்பித்தேன். என்னிடம் உள்ள The Voice of the Prophet – Tucson Tabernacle Books வெளியிட்ட ஆங்கில பிரதியை எடுத்தேன். அங்கும் Amen, We're in the Millennium என்று இருப்பதாகவே கண்டேன். (Volume No.3, Book No. 5) இதன் மீதும் எனக்கு ஒருமனப்பாடு மற்றும் நம்பிக்கை பிறக்கவில்லை. பல ஆண்டுகளுக்கு முன்பு நான் ஆயிரம் வருட அரசாட்சி குறித்து சபைக்கால தூதனுடைய செய்திகளில் அவர் எங்கெங்கு பேசியிருக்கிறார் என ஒரு தொகுப்பு பட்டியல் இருந்தது. அதை தேடி கண்டுப்பிடித்து இந்த காரியம் குறித்து என்ன எழுதியிருக்கிறது என்று பார்க்கலானேன். அங்கு Amen, For the Millennium, the Bible said என இருந்தது. We're in the Millennium என்று இல்லை. இது என்னை இன்னும் அதிகமான குழப்பத்திற்குள்ளாக்கியது. முடிவாக VOGR ஆங்கில புத்தக வெளியீடுக்கு சென்றேன். அங்கு இந்த பகுதி பக்கம்.28 ல் 216 பத்தியில் காணப்பட்டது. இங்கு Amen! Where, "In the Millennium: the Bible said என இருந்தது. இப்பொழுதுதான் எனக்கு நிம்மதி கிடைத்தது. இதற்கு சாட்சியாக VOGR, PDF Message க்கு விரைந்தேன். இந்த செய்தி PDF File ல் பதிவு செய்து வைத்திருக்கிறேன். ஆதலால் உடனே அதை திறந்து பார்க்க என்னால் முடிந்தது. இங்கும் இந்த பகுதி பக்கம்.28, 216 வது பத்தியில் இருப்பதை கண்டேன். அது Amen! Where, "In the Millennium: the Bible said என இருந்தது. மிக்க ஆனந்தத்தில் மகிழ்ந்தேன். ஆனந்தத்தை என் குடும்பத்தாரோடும் பகிர்ந்துக்கொண்டேன். அவர்களும் சகோ.ஜீவஜெயத்தின் யூடியூப் பிரசங்கத்தை தங்கள் காதுகளினால் கேட்டார்கள். என் தேவன் ஏற்றவேளையில் நான் கலங்கி, திகைத்துக் கொண்டிருந்த வேளையில் பிரகாசமான மனக்கண்களை கொடுத்து குழப்பத்திற்கு விடையை காணச்செய்தார். Where என்ற வார்த்தை We're (We are) என்று தவறாக பிரிண்ட் ஆகி உள்ளதினால் இந்த குழப்பம் என்பதை புரிந்துக்கொண்டேன். பாருங்கள் பிசாசு மக்களை எப்படியெல்லாம் தீர்க்கத்தரிசியின் செய்தியிலிருந்து திசைதிருப்புகிறான் என்பதை புரிந்துக்கொண்டேன். இந்த வெளிச்சம் சகோ.ஜீவஜெயத்திற்கு கிடைக்காதபடிக்கு அவருடைய கண்கள் பிசாசினால் குருடாக்கப்பட்டிருந்தது. அவர் குருடனாகயிருந்து பல குருடர்களுக்கு வழிகாட்டி அனைவரையும் பாதாளத்தில் விழச்செய்தார். இந்த செய்தியை ஆங்கலத்திலிருந்து தமிழில் மொழிபெயர்த்தவர் யார் என தெரியவில்லை. ஆனால் இது வில்லியம் பிரன்காம் குட் நியூஸ் சொசைட்டியினால் (WBGNS) வெளியிடப்பட்டுள்ளது. பொதுவாக செய்திகளை மொழிப்பெயர்த்து வெளியிடுகிறவர்கள் யார் அதை மொழிப்பெயர்த்தார் என்ற விவரத்தை தெரிவிப்பதில்லை. சென்னை பெரவலூர், சென்னை சபை, சகோ.மோசஸ் தயானந்தம், VOGR கூட இந்த விவரங்களை வெளியிடுவதில்லை. இந்த தகவல் கொடுப்பதற்கு என்ன வெட்கமா? அல்லது இதில் ஏதாவது தில்லுமுல்லு உண்டா? யார் யாரைக்கொண்டு செய்திகளை மொழிப்பெயர்க்கிறார்கள் என்ற விவரம் தெரியக்கூடாதா? பொதுவாக இவர்கள் விசுவாசி அல்லாத நபர்களை கொண்டு செய்திகளை மொழிப்பெயர்ப்பதுபோல் யூகிக்க தோன்றுகிறது. ஆதலால் தான் இது குறித்ததான விவரங்களை வெளியிடுவதில்லை.

பக்கம்.91: இந்த கூடாரப் பண்டிகையானது கடைசி பண்டிகையின் ஏழாவது பண்டிகையாக இருக்கிறது. இப்பொழுது நாம் ஏழாம் சபைக்காலத்துக் கூடாரப்பண்டிகையின் கீழ் தொழுது கொண்டு வருகிறோம். ஆயிரம் வருட அரசாட்சியில் இந்த கூடாரப் பண்டிகையான ஏழாம் நாளில் இருந்துகொண்டிருக்கிறோம் என உள்ளது. சகோ.ஜீவஜெயம் இதைக்கொண்டு நாம் ஆயிரம் வருட அரசாட்சியில் இருக்கிறோம் என வலது கைக்கும் இடது கைக்கும் வித்தியாசம் தெரியாத விசுவாசிகளை பிசாசின் ஏஜெண்டாக இருந்துகொண்டு பாதாளத்திற்கு அழைத்து சென்று தனது பணியை திறம்பட செய்து பிசாசின் பாராட்டை பெற்றுள்ளார். இப்பொழுது இதுக்குறித்து செய்தி என்ன கூறுகிறது? சற்று ஆங்கிலத்தில் தியானிப்போம். In the Millennium We'll be under the feast of the Tebernacle again in the seventh day. இதன் சரியான தமிழ் மொழிப்பெயர்ப்பு என்ன? ஆயிரம் வருட அரசாட்சியில் நாம் மறுபடியும் இந்த ஏழாம் நாளின் கூடாரப்பண்டிகையின் கீழ் இருப்போம் என்பதாகும். **இங்கு செய்தி நாம் இருந்துகொண்டிருக்கிறோம் என கூறவில்லை, மாறாக இருப்போம் என்றே கூறுகிறது.** பாருங்கள். இந்த பேலியாள் மக்களின் செய்தி மொழிப்பெயர்ப்புக்கள் யாவும் மாயையும் மனதுக்கு சஞ்சலமுமாய் இருக்கிறது. ஆம் மாயை, எல்லாம் மாயை என்று பிரசங்கி கூறுகிறான். ஆக சகோ.ஜீவஜெயம் ஊழிய அழைப்பு எதுவும் இல்லாது, தன்னுடைய அழைப்பை உறுதிப்படுத்த முடியாத நிலையில் இருந்துக்கொண்டு, தன் சுயபுத்தியின்மேல் சாய்ந்து, தேவசித்தத்திற்கு புறம்பாக ஊழியம் செய்து கொண்டு வருகிறார். பிசாசின் கண்ணில் விழுந்துவிட்டார்.

21. முடிவாக சகோ.ஜீவஜெயம் நாம் ஆயிரம் வருட அரசாட்சியில் இருக்கிறோம் என்பதற்கு ஆதாரமாக கொண்டு முக்கி முக்கி யூடியூபில் பிரசங்கித்த "பரலோக மணவாளன் மற்றும் பூமிக்குரிய மணவாட்டியின் வருங்கால இருப்பிடம்" என்ற தமிழ் மொழிப்பெயர்ப்பின் பக்கங்கள் 45, 46, 48 மற்றும் 91ல் காணப்பட்ட சரத்துக்கள் யாவும் சாரமற்று போயிற்று. அவைகள் யாவும் தந்திரமாக பிசாசினால் தன்னுடைய மொழிப்பெயர்ப்பாளர்களை கொண்டு நுழைக்கப்பட்டது. அதை கொண்டு ஒளியின் தூதனுடைய வேஷத்தை தரித்தவர்கள் விசுவாசிகளை திசைதிருப்புகிறார்கள். ஆனால் அது தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களை வஞ்சிக்கமுடியாது. சகோ.ஜீவஜெயம் அவர்களே உங்களால் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களை வஞ்சிக்க முடியாது. நீங்கள் தான் உங்கள் கூடாரத்தை

ஸ்தாபன சபைகளை நோக்கி போட்டுக்கொள்ளுங்கள். நீங்கள் பிசாசின் கண்ணில் விழுந்துவிட்டதால்தான் தேவனுடைய வார்த்தையை, இக்காலத்திற்குரிய செய்தியை யூடியூபில் பிரசங்கித்து வருகிறீர்கள்.

22. முடிவாக சகோ. பிரன்காம் தன் ஊழியத்தின் கடைசிகால கட்டத்தில் 1965 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் ஆயிரம் வருட அரசாட்சி குறித்து கீழ்கண்டவாறு பிரசங்கிக்கிறார்

(அ) மகிழ்வான ஆயிரம் ஆண்டு நாளுக்காக நாம் காத்திருக்கிறோம். ஸ்தோத்தரிக்கப்பட்ட நம் கர்த்தர் வந்து தம்முடைய மணவாட்டியை எடுத்துக்கொள்வார். (**இப்பொல்லாத காலத்தின் தேவன்** பத்தி 179. செய்தி நாள்.01.11.1965) கவனியுங்கள் நாம் ஆயிரம் வருட அரசாட்சிக்காக 1965 ஆம் ஆண்டு காத்துக்கொண்டிருக்கிறோம் என செய்தி கூறுகிறது. இதற்கு பின் கரத்தர் வந்து தம்முடைய மணவாட்டியை எடுத்துக்கொள்ள வேண்டும். அது எப்பொழுது? அவரும் அறியார். நாமும் அறியோம், தேவ தூதர்களும் அறியார்கள், மனுஷகுமாரனும் அறியார். தேவன் ஒருவரே அறிவார்.

(ஆ) அவளை குறித்து (கிறிஸ்துவின் மணவாட்டியை குறித்து – கா.யோ) ஒரு நிமிடம் பேசுவோம். அவள் தனது ஆண்டவருக்காகவும், அவரோடு வாழவிருக்கும் ஆயிரம் ஆண்டு தேன்நிலவுக்காகவும் காத்துக்கொண்டிருக்கிறாள். அவள் வார்த்தை மணவாட்டியாக இருக்கிறபடியினால் வார்த்தை மணவாளனோடு இருப்பாள். (**இப்பொல்லாத காலத்தின் தேவன்.** பத்தி. 128, செய்தி நாள்.01.11.1965)

ஆக பிரியமானவர்களே இக்காலத்திற்குரிய செய்தியின்படி 1965 வரை ஆயிரம் வருட அரசாட்சிக்குள் நாம் வரவில்லை. என்னை பொறுத்த அளவில் இதுவரை நாம் அந்த நாளுக்கு வரவில்லை. ஆதலால் மரண அடி கண்ட இந்த உபதேசத்தையும், அந்த உபதேசத்தை கொண்டவந்தவர்களை விட்டு உங்களை காத்துக்கொள்ளுங்கள்.

**23. அடுத்து தனது மனம்போன போக்கில் மாறுபாடாய் நடக்கும் சகோ.ஜீவஜெயத்தின் எடுத்துக்கொள்ளப்படுதல் நடந்து விட்டது என்ற பொய் போதகத்திற்கு வருவோம். இவர் இதற்கு ஆதாரமாக ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படுதல் பத்திகள்.153, 157, 204, 206 இவைகளை சுட்டிக்காட்டுகிறார். இந்த செய்தி நாள்.04.12.1965.**

**பத்தி.152-154:** முதலாவதாக ஆரவாரம். மக்களை ஆயுத்தப்படுத்தும் ஒரு செய்தி. மணவாட்டியை ஒன்று சேர்க்கிறது. இரண்டாவதாக உயிரோடு எழுப்பும் சத்தம். (யோ.11:38,44) லாசருவை கல்லறையை விட்டு வெளியே வரும்படி அழைத்த அந்த சத்தம். மரித்தோர் உயிரோடு எழும்புகின்றனர். மூன்றாவதாக எக்காளம் ஊதப்பட்டு ஜனங்கள் விருந்துக்கு அழைக்கப்படுகின்றனர். அதுதான் ஆட்டுக்குட்டியானவர் மணவாட்டியுடன் ஆகாயத்தில் நடத்தும் விருந்தாகும். அதாவது ஆகாயத்தில் நடக்கும் விருந்துக்காக உயிரோடெழும்பின மணவாட்டியும், உயிரோடு உள்ள மணவாட்டியும் ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படுதல்.

**பத்தி.204:** மணவாட்டி கிறிஸ்துவின் ஒரு பாகமாக இருக்கிறாள். அவள் ஸ்தாபனத்திலிருந்து எடுக்கப்படவில்லை. அவள் இக்காலத்திற்குரிய தேவனுடைய வார்த்தையிலிருந்து எடுக்கப்பட்டாள். மணவாட்டி கிறிஸ்துவின் சாயலுக்கு ஒப்பாக வார்க்கப்படவேண்டும்.

**பத்தி.206:** என்றாவது ஒரு நாளில் எக்காளம் தொனிக்கும். நீங்கள் எடுத்துக்கொள்ளப்படாவிட்டால் மிருகத்தின் முத்திரையை நீங்கள் அறியாமலே தரித்துக்கொள்ள நேரிடும்.

இங்கு கவனியுங்கள் எடுத்துக்கொள்ளப்படுதல் என்றாவது ஒரு நாள் நடக்கும் என தீர்க்கதரிசி 04.12.1965 ல் கூறுகிறார். என்றாவது ஒருநாள் எக்காளம் தொனிக்கும் என்று கூறுகிறார். ஆனால் அது 04.12.1965 வரை தொனிக்கவில்லை. அப்படியானால் 1965 வரை எடுத்துக்கொள்ளப்படுதல் நடைபெறவில்லை.

24. அடுத்து சகோ.ஜீவஜெயம் நாலாவது முத்திரையில் பத்திகள்.130-132, 366, 367,376, 383, 395, 396 போன்ற பத்திகளை தன் உபதேசத்தை உறுதிப்படுத்த எடுத்துக்கொள்கிறார். இது குறித்தும் நாம் இங்கு காண்போம்.

**பத்தி.130:** அவர்கள் அவரை கண்டுக்கொள்ள தவறினார்கள் என்று நாம் காண்கிறோம். அங்கு நின்றிருந்த அப்போஸ்தலர்கள் கூட அவரை அறிந்துக்கொள்ளவில்லை. எலியா முந்தி வரவேண்டும் என்று வேதவாக்கியங்கள் உரைக்கின்றனவே என்று அவரை கேட்டனர்.

**பத்தி.131:** அதற்கு இயேசு, “எலியா ஏற்கெனவே வந்தாயிற்று, நீங்களோ அவனை அறியவில்லை“ என்பதாக பதிலளித்தார்.

**பத்தி.132:** உயிர்தெழுதலும் அல்லது எடுக்கப்படுதலும் அதே மாதிரி சம்பவிக்கும். அது சம்பவித்ததை அவர்கள் அறியாமல் போனார்கள். அது இரகசியமாக நிகழ்வதால், பெரும்பான்மையோர் நிகழ்ந்ததை அறியமாட்டார்கள்.

**பத்தி.366,367:** தேவன் முத்திரைகளில் ஒன்றை உடைத்து, ஸ்தாபனங்களின் பிரமாணங்களுக்கு முன்னால் முழங்கால் படியிடாத 700 பேரை அவருக்காக வைத்திருக்கிறார் என்று காண்பித்தார். அவர் புத்தகத்திலுள்ள இரகசியங்களை அவனுக்கு காண்பிக்கும் வரை அவன் மாத்திரமே இரட்சிக்கப்பட்டுள்ளதாக அவன் கருதியிருந்தான். யோவான் அதிக சத்தமிட்டான். அவனுடைய பெயரை அவன் அப்புத்தகத்தில் கண்டிருக்க வேண்டும்.

**பத்தி.376:** பரலோகத்தில் அரைமணி நேரம் அமைதல் உண்டாயிற்று. அங்கு ஏதோ ஒன்று சம்பவித்தது.

25. இங்கு சகோதரன் யாரும் அறியாத நினைத்திறாத வேளையில் இரகசியமாக எடுத்துக்கொள்ளப்படுதல் நடந்துவிடும் என்கிறார். எலியா வந்து சென்றதை அந்நாட்களில் மக்கள் அறியாதிருந்து அவன் வருவான் என்று எதிர்பார்ப்பில் இருந்தனர். ஆனால் எலியாவோ வந்து, சென்றுவிட்டான். அவர்கள் அதை அறியவில்லை. அதேபோன்று மணவாட்டியும் யாரும் அறியாத வேளையில் எடுத்துக்கொள்ளபடுவாள் என்று கூறுகிறார். இப்பொழுது கீழ்கண்ட செய்தியின் வாயிலாக அவருடைய உபதேசத்தை ரூபகப்படுத்த முயற்சிக்கிறார். இதற்கு இன்னும் ஆதாரமாக **ஏழு சபையின் காலங்களுக்கும், ஏழு முத்திரைகளுக்கும் இடையே உள்ள பிளவு** என்ற செய்தியில் பத்திகள்.248,256 யை எடுத்துக்கொண்டுள்ளார். இந்த செய்தி.17.03.1965 ல் பிரசங்கிக்கப்பட்டது. 1967ல் புத்தக வடிவில் வெளியிடப்பட்டது.

**பத்தி.248:** அவன் முதலாம் ஜாமத்தில் நித்திரை அடைந்தாலும் அல்லது இரண்டாம், மூன்றாம், நான்காம், ஐந்தாம், ஆறாம், ஏழாம் ஜாமங்களில் நித்திரை அடைந்திருந்தாலும், எங்கே நித்திரை அடைந்திருந்தாலும் பரவாயில்லை. என்ன நேரிடும்? **தேவ எக்காளம் முழங்கும், கடைசி முத்திர திறக்கப்பட்டு, கடைசி தூதன் செய்தி அளித்துக்கொண்டிருக்கும் அதே தருணத்தில் கடைசி எக்காளம் முழங்கும்,** அப்பொழுது மீட்பர் தமது இரத்தத்தினால் கழுவப்பட்ட சபையாகிய தம் பொக்கிஷங்களை பெற்றுக்கொள்ளப்புறப்படுவார். இங்கு கவனியுங்கள், புறப்பட்டு வருவார் என்ற அர்த்தத்தில் செய்தி இல்லை. மாறாக புறப்பட்டு வருகிறார் (Comes forth) என உள்ளது. இந்த பத்தி குறித்து தமிழில் கீழ்கண்டவர்களின் வெளியீடுகளில் அவர்கள் மொழிப்பெயர்ப்பை பார்க்கலாம்.

1. சகோ.மோசஸ் தாயனந்தம் – வில்லியம் பிரன்காம் எவஞ்சலிக்கல் சொசைட்டி வெளியீடு பக்கம்.175, பத்தி.248.
2. வில்லியம் பிரன்காம் குட் நியூஸ் சொசைட்டி வெளியீடு பக்கம்.174, பத்தி.248.
3. மணவாட்டி கூடாரம் (சகோ.ஜான் சாமுவேல்) பதிப்பு பக்கம்.108, பத்தி.2
4. ஈவினிங் லைட் பிரிண்டர்ஸ் வெளியீடு பக்கம்.116, கடைசி பத்தி.

இந்த நான்கு தமிழ் பதிப்புகளிலும் ஒரே மொழிப்பெயர்ப்பாக மேற்கண்டவாறு உள்ளது.

5. இதன்பின் ஆங்கிலத்தில் Tucson Terbanacle Books வெளியீடு பக்கம்.104, பத்தி.3. Para No.248: No Matter if he falls asleep in the first watch, second, third, fourth, fifth, sixth or seventh, wherever he falls asleep…. What'll happen? The trumpets of God shall sound and the last trump will blast forth the same time that the last angel's giving his message and the last seal is opened and that last trumpet will sound and the Redeemer comes forth to take His redeemed possessions – the church, blood – washed.
6. VOGR ஆங்கில வெளியீடு பக்கம்.92 பத்தி.248. இதன் சரத்து மேற்கண்டபடியே இருந்தது.
7. சகோ.பிரன்காமுடைய இந்த செய்தியை அவரது ஆடியோ கேசட்டில் கேட்டேன். அதில் அவர் மேற்கண்டவாறே பேசுகிறார்.

ஆக மேற்கண்ட நான்கு தமிழ் மொழிப்பெயர்ப்புகளிலும், அதன்பின் கண்ட இரண்டு ஆங்கில மொழிப்பெயர்ப்புகளிலும், ஆக மொத்தமாக ஆறு மொழிப்பெயர்ப்புகளிலும் வித்தியாசம் எதுவும் இல்லை. செய்தியின் ஆடியோ கேசட்டிலும் வித்தியாசம் இல்லை. ஆனால் எனக்கு இதில் ஒருமனப்பாடு இல்லை.

8. ஆனால் மணவாட்டி ஊழியம் (சகோ.ஜீவஜெயம்) தமிழ் பதிப்பு ஆண்டு 2017, 54வது பக்கம், பத்தி 248 ல் மாத்திரம் **கடைசி தூதன் செய்தியளித்தப் பிறகு** என காணப்பட்டது. ஆனால் இது VOGR ன் தமிழ் மொழிப்பெயர்ப்பு என கேள்விபட்டேன். இங்கு சகோ.ஜீவஜெயம், மணவாட்டி ஊழியம் என்று போட்டு மாய்மாலம் பண்ணியிருப்பதாகவும் கேள்விபட்டேன். இது மணவாட்டி ஊழியம் பதிப்பு அல்ல. மாறாக செய்தியை VOGR பதிப்பில் இருந்து இறக்கம் செய்து அதை தனது பதிப்பு என போட்டுக்கொண்டார். ஆக மணவாட்டி ஊழியம் ஒரு தில்லுமுல்லு ஊழியம் என்பதை நிருப்பிக்கிறது.

ஆக நான்கு பேருடைய தமிழ் மொழிப்பெயர்ப்பு இரண்டு ஆங்கில செய்தி, செய்தியின் ஆடியோ அனைத்தும் ஒரு பொருளைக் கொண்டதாகயிருந்தது. ஆனால் VOGR சென்னை தமிழ் மொழிப்பெயர்ப்பு மட்டும் மாறாக இருந்தது. இது சகோ.ஜீவஜெயம் மொழிப்பெயர்ப்போ அல்லது VOGR சென்னை தமிழ் மொழிப்பெயர்ப்போ, அது எதுவாக இருந்தாலும் இந்த மாறான மொழிப்பெயர்ப்பில் மட்டும்தான் எனக்கு ஒருமனப்பாடு கிடைத்தது.

26. அடுத்து பத்தி 256 குறித்து : இங்கு பல மொழிப்பெயர்ப்புகளை நான் காணும்போது இந்த மொழிப்பெயர்ப்புகளில் பல எதிர்மாறான கருத்துக்கள் காணப்பட்டது. ஏனெனில் கடைசி எக்காளத்தில் தேவ எக்காளம் முழங்கும். கடைசி முத்திரை உடைக்கப்பட்டிருக்கும்போது ஏழாம் தூதன் தன் செய்தியை அளிக்கும்போது, கடைசி எக்காளம் முழங்கும். கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் எழுந்திருப்பார்கள். உயிரோடுயிருக்கும் நாமும் அவர்களோடே கூட எடுக்கப்பட்டு அவரை ஆகாயத்தில் சந்திப்போம் என்பதற்கு மாறான கருத்துக்கள் காணப்பட்டது.

1. சகோ.மோசஸ் தயானந்தம் வெளியீட்டின் பக்கம்.176 பத்தி.256ல் **எழாம் தூதன் தன் செய்தியை அளிக்கும் போது** என இருந்தது.
2. வில்லியம் பிரன்காம் குட்நியூஸ் சொசைட்டியின் பதிப்பில் பக்கம்.176, பத்தி.256 ல் மேற்கண்டவாறே ஏழாம் தூதன் தன் செய்தியை அளிக்கும்போது என மொழிப்பெயர்ப்பு இருந்தது.
3. VOGR / ஆங்கில PDF File க்கு சென்றேன். அங்கு பக்கம்.103 பத்தி.256 ல் When the Seventh Angel is giving his Message என்றே இருந்தது.

4. VOGR ஆங்கில பதிப்புக்கு சென்றேன். பக்கம்.93, பத்தி.256 இங்கு When the Seventh Angel is giving his Message என்றே இருந்தது.
5. சகோ.பிரன்காமின் செய்தி ஆடியோ கேசட்டை போட்டுப்பார்தேன். அதில் ஏழாம் தூதன் தன் செய்தியை அளிக்கும்போது – When the Seventh Angel is giving his Message என்றே இருநத்து.
6. ஈவினிங் லைட் பிரிண்டர்ஸ் மொழிப்பெயர்ப்பில் பக்கம்.117, 5வது பத்தியில் கீழ்கண்டவாறே மொழிப்பெயர்ப்பு இருந்தது. கடைசி எக்காளத்தில் தேவ எக்காளம் முழங்கும். அப்பொழுது கடைசி முத்திரை உடைக்கப்பட்டிருக்கும். ஏழாம் தூதன் தன் செய்தியை அளித்தப்பின்னர் கடைசி எக்காளம் முழங்கும் என இருந்தது.
7. மணவாட்டி கூடாரம் பதிப்பில் பக்கம்.109 முதல் பத்தியில் **ஏழாம் தூதன் செய்தியை அளித்தப்பின்னர்** என்று மொழிப்பெயர்க்கப்பட்டிருந்தது.
8. Tucson Terbarnacle Books பதிப்பு பக்கம்.105 பத்தி.5 க்கு வந்தேன். இங்கு மணவாட்டி கூடாரம் மொழிப்பெயர்ப்பை போன்று இருந்தது. அதாவது When the Seventh Angel has given his Message என இருந்தது.
9. மணவாட்டி ஊழியம் பதிப்புக்கும் சென்றேன். ஆனால் இது அவருடையது அல்ல. மாறாக VOGR 2017ம் ஆண்டு பதிப்பை இவர் இறக்கம் செய்து அதில் தன் பெயரை சகோ.ஜீவஜெயம் போட்டுக்கொண்டார். இதில் **ஏழாம் தூதன் தன் செய்தியை அளித்தப்பிறகு** என இருந்தது. பக்கம்.56, பத்தி.256. காரியம் இப்படியிருக்க பின் எப்படி சகோ.ஜீவஜெயம் உயிர்தெழுதல் / எடுத்துக்கொள்ளப்படுதல் சகோ.பிரன்காமின் ஊழியத்தின் பாதையில் நடந்துவிட்டது என கூறுகிறார்?
ஆக பத்தி.256 குறித்து நான் தெரிந்துக்கொண்ட 9 பதிப்புகளில் முதல் 5 பதிப்புகள் ஒரே கருத்தை கொண்டதாகவும், அடுத்த 4 பதிப்புகள் எதிர்மாறான கருத்தை கொண்டதாகவும் காணப்பட்டது. குழப்பங்களை அறிந்து மிக்க மனம் நொந்து போனேன். இக்காலத்திற்குரிய செய்தி பிசாசின் கரத்தில் இருந்துக்கொண்டு அது தெரிந்துகொள்ளபட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாக கிரியை செய்து வருகிறதை கண்டேன். ஆனால் அது தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களை நிச்சியமாக வஞ்சிக்கமுடியாது. எனக்கோ மாறுபட்ட கருத்துக்களை கொண்ட அந்த 4 பதிப்புக்களில் தான் ஒரு மனம் ஏற்பட்டது. காரணம் சகோ.பிரன்காமுடைய இதர செய்திகளை புரட்டி, அலசி பார்க்கும் பொழுது என்னுடைய முடிவு சரியானது என்று தோன்றியது. சகோ.பிரன்காமின் ஊழியத்தில் நாட்களில் அவர் செய்தி கொடுத்துக் கொண்டிருந்த காலங்களில், ஏழாம் முத்திரை திறக்கப்பட்ட காலகட்டத்தில் எடுத்துக்கொள்ளப்படுதல் நடைபெறவில்லை. ஏழு முத்திரைகளின் வெளிப்பாடு. 1963 ல் பிரசங்கிக்கப்பட்டது. சகோ.பிரன்காம் டிசம்பர் 1965 ல் நித்திரையடைந்தார். இந்த காலகட்டத்தில் அவர் செய்தி கொடுத்துக்கொண்டிருந்த வேளைகளில் எடுத்துக்கொள்ளப்படுதல் நடைபெறவில்லை.

27. சென்னை VOGR க்கு போன் செய்து VOGR 1967 ல் வெளியிட்ட ஏழு முத்தரைகளின் வெளிப்பாடு பிரதி ஒன்றை கேட்டேன். தங்களிடம் ஒரே ஒரு பிரதி மாத்திரம் தான் உண்டு என்று கூறிவிட்டார்கள். அப்படியானால் இந்த பிளவு செய்தி மட்டும் எனக்கு நகல் எடுத்துக்கொடுங்கள் அல்லது நான் தங்கள் அலுவலகம் வந்து அதன் நகலை எடுத்துக்கொள்கிறேன் என்றேன். அதற்கும் அவர்கள் மறுத்துவிட்டார்கள். ஏன்? அதில் ஏதாவது தில்லுமுல்லுகள் இருக்கிறதா? மறுக்க காரணம்தான் என்ன? எல்லாம் மாயையும் மனதிற்கு சஞ்சலமுமாயிருக்கிறது. இந்த VOGR மீது உள்ள நம்பிக்கை நாளுக்குநாள் குறைந்துக்கொண்டே செல்கிறது. அது பரிசுத்த ஆவியினால் பரிசுத்த மனிதர்களை கொண்டு இயங்குகிறது என நிச்சயமாக என்னால் கூறமுடியாது.
The Revelation of the seven seals – ஏழு முத்திரைகளின் வெளிப்பாடு ஆங்கிலத்தில் 1967 ல் வெளியிடப்பட்டது, அதில் இந்த பிரச்சனைக்குரிய இரு பத்திகளில் **கடைசி தூதன் செய்தி அளித்தப்பிறகுதான்** என்றிருந்தது. இந்த பதிப்பில் அந்நாட்களில் செய்தியானது பத்தி பத்தியாக நம்பரிட்டு வெளியிடப்படவில்லை. இதன் பிறகு 1993 ல் இதன் மறுபதிப்பு வெளியிடப்பட்டது. இதில்தான் கூட்டல் குறைத்தல்கள் கொண்டு முற்றிலுமாக பொருள் வேறுபடும் படியாக **கடைசி தூதன் செய்தியை அளித்துக்கொண்டிருக்கும்போது** என மொழிப்பெயர்க்கப்பட்டுள்ளது. இது, Voice of God விசுவாசிகளுக்குச் செய்த ஒரு பெரிய விசுவாச துரோகம், மாய்மாலம், மக்களை திசைதிருப்பும் செயல். இதினால் பலர் இந்த மொழிப்பெயர்ப்பு தவறு என்பதை அறியாமல் தங்கள் பிராணனை வாங்கும் கண்ணி என அறியாமல் அதில் விழுந்தார்கள். இதைக்கொண்டுதான் 1963 ல் கர்த்தருடைய வருகை வந்துவிட்டது என்ற உபதேசம் எழுந்தது. ஆக நம் மத்தியில் காணப்படும் இந்த மொழிப்பெயர்ப்புகளில் கடைசி கால தூதன் செய்தியை அளித்தப்பிறகு என்பது 1967 ல் வெளியிடப்பட்ட வெளியீட்டை அடிப்படையாகவும், கடைசிகால துதன் செய்தி அளித்துக்கொண்டிருக்கும்போது என்பது 1993 ல் வெளியிடப்பட்ட வெளியீட்டை ஆதாரமாக கொண்டதாகும். பிரியமானவர்களே இந்த குழப்பம் குறித்து நான் 2005 நவம்பர், டிசம்பர் – ஜனவரி 2006 ல் ஐயோ, ஆபத்து! ஆபத்து!! Voice of God Recordings பிசாசின் கண்ணில் விழுந்ததே என்ற தலைப்பில் ஒரு நிருபம் எழுதியுள்ளேன். விசுவாசிகளை ஏற்கெனவே எச்சரித்துள்ளேன்.

28. ஏழு முத்திரைகளின் வெளிப்பாடு செய்திக்கு பிறகு சகோ.பிரன்காம் தன்னுடைய பிரசங்கங்களில் எடுத்துக்கொள்ளப்படுதல் குறித்து கூறுவதை ஜாக்கிரதையாக கவனியுங்கள்.
1. கடைசி காலத்தில் வெளிச்சம் உண்டாகும். மரித்தோர் உயிர்தெழுதல் இருக்கும். அவர் அதை உறுதிப்படுத்துவார். அது உண்மை. அவர் அதை நிருபிப்பார். சபையின் எடுத்துக்கொள்ளப்படுதல் நிகழும். அது எப்படி முடியும்? எனக்கு தெரியாது. ஆனால் அவர் அதை நிருபிப்பார். **(அவருடைய வார்த்தையை நிருபித்தல்**

பக்கம்.81, பத்தி.221, பக்கம்.85, பத்தி.232) செய்தி நாள்.16.08.1964. ஆனால் 1964 வரை மரித்தோர் உயிர்தெழுதல், எடுத்துக்கொள்ளப்படுதல் நடைபெறவில்லை.

2. **இயேசு இன்னும் 100 ஆண்டுகளுக்கு வராமல் இருக்க கூடும்.** அவர் எப்பொழுது வருவார் என எனக்கு தெரியாது. அவர் எப்பொழுது வருகிறார் என்று எந்த மனுஷனுக்கும் தெரியாது. ஆனால் அவர் வரும் வரைக்கும் நான் தொடர்ந்து பிரசங்கிக்க வேண்டும். அவர் எப்பொழுது வருவார் என எனக்கு தெரியாது. ஆனால் அவருடைய வார்த்தைக்கும், அவருடைய மக்களுக்கும் நான் உண்மையாய் ஜீவித்து, ஒரு கிறிஸ்தவனைபோல வாழ்ந்து, அவருடைய வருகைக்காக காத்திருக்க விரும்புகிறேன். (கே.ப.314, பத்தி.201,202 நாள்.23.08.1964) கவனியுங்கள் 1964 ல் இன்னும் இயேசு 100 ஆண்டுகள் வராமல் இருக்ககூடும் என்று கூறுகிறார். ஆதலால் எடுத்துக்கொள்ளப்படுதல் 1964 வரை நடைபெறவில்லை.

3. இதுகுறித்து மேலும் நீங்கள் மற்றொரு கேள்வி பதில் எண்.172 பத்தி.132-135 ல் தியானிக்கலாம்.

4. நாம் கர்த்தருடைய வருகைக்கு காத்திருக்க மட்டுமே செய்ய வேண்டும். காத்திருக்க மட்டுமே செய்யுங்கள். உங்கள் தீவட்டிகளை சுத்தம் பண்ணி வைத்திருங்கள். அதை எண்ணெயினால் முழுவதும் நிரப்புங்கள். ஒவ்வொரு மணிநேரமும் ஜெபித்துக்கொண்டிருங்கள். ஒவ்வொரு நாளும் அல்ல. ஒவ்வொரு மணிநேரமும் உங்களை ஆயத்தமாய் வைத்திருங்கள். (கே.ப.253, பத்தி.198, நாள்.23.08.1964) பாருங்கள் 1964 ல் கர்த்தருடைய வருகைக்கு காத்திருக்க மாத்திரமே செய்யுங்கள் என்கிறார்.

5. சகோ.பிரன்காமே, சபைக்காலம் லவோதிக்கேயா முடிந்துவிட்டது என்று நீங்கள் அண்மையிலில் எப்பொழுதாவது கூறியது உண்டா? இல்லை. அது முடிவடைந்து விட்டது என்று நான் ஒருபோதும் கூறியது இல்லை. அவ்விதம் நான் கூறினால் அதை தவறாக கூறினேன். அல்லது நீங்கள் அதை தவறாக புரிந்துக்கொண்டிருப்பீர்கள். இது கடைசி சபைக்காலம். இது சபைக்காலங்களின் முடிவு ஆகும். இந்த லவோதிக்கேயா இன்னும் முடிவடையவில்லை. அது முடிவடைந்ததும் சபை போய்விடும். சபை இருக்கும் வரைக்கும் அது முடியவில்லை. **மணவாட்டி சபையை விட்டு எடுக்கப்படும்போது சபைகாலம் முடிவடையும். லவோதிக்கேயா குழப்பத்திற்குள் செல்லும். மணவாட்டி மகிமைக்குள் செல்லுகிறாள்.** புத்தியில்லாத கன்னிகைகள் மேல் 3 ½ ஆண்டு உபதிரவ காலம் வந்திரங்கும். (கே.ப.391, 392 COD 2:22 பத்தி 74,75 நாள்.30.08.1964) பாருங்கள் 1964 வரை சபைக்காலம் முடிவடையவில்லை.

ஆக பிரியமானவர்களே சகோ.பிரன்காம் அளித்த, நான் தியானித்த செய்திகளின் படி 1964 வரை எடுத்துக்கொள்ளப்படுதல் நடைபெறவில்லை. லவோதிக்கேயா சபைக்காலம் முடிவடையவும் இல்லை. சபை எடுத்துக்கொள்ளப்படுதல் எப்பொழுது நடைபெறும் என்பது கூட சகோ.பிரன்காமிற்கு தெரியாது. அவர் கர்த்தருடைய வருகைக்காக தன் நித்திரை வரை காத்துக்கொண்டிருந்தார். ஆனால் அது நிகழவில்லை.

29. மேற்கண்ட எனது எடுத்துக்காட்டுகளுக்கு ஆதாரமாக 1965 ஆம் ஆண்டு அவர் பிரசங்கித்த மேலும் சில செய்திகளை இங்கு கவனியுங்கள்.

1. சகோதரரே, வரப்போகும் அந்த எடுத்துக்கொள்ளப்படுதலின் நேரத்திற்காக நாம் ஆவலுடன் எதிர்நோக்கி இருக்கிறோம். முதலாம் எடுத்துக்கொள்ளப்படுதல் நடந்து விட்டது. இரண்டாவது இப்பொழுது அருகில் உள்ளது. (**ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படுதல்.** பக்கம்.54, பத்தி.3,4 நாள்.12.04.1965) கவனியுங்கள் 1965 ல் எடுத்துக்கொள்ளப்படுதலை நாம் ஆவலுடன் எதிர்நோக்கி வருகிறோம் என்கிறார்.

2. **சபை முழுவதும் சரியாயிருக்கும் வரை கிறிஸ்து வர முடியாது.** அவர் நமக்காக காத்துக்கொண்டிருக்கிறார். நாம் முடிவில் வந்துவிட்டோம் என நம்புகிறேன். (**இதை அறியாமலிருக்கிறாய்** பக்கம்.70, பத்தி.4, செய்தி நாள்.15.08.1965) நாம் எடுத்துக்கொள்ளபடுதலுக்கான முடிவு நேரத்தில் வந்துவிட்டோம். ஆனால் 1965 வரை நடைபெறவில்லை.

3. அவருடைய வருகை சமீபமாயுள்ளது என்று நாங்கள் இன்னும் அதிகமாக விசுவாசிக்கிறோம். இப்பொழுது நாம் நம்முடைய சந்ததியில் கர்த்தருடைய வருகையை எதிர்நோக்கி கொண்டிருக்கிறோம். நம்முடைய சந்ததியில் நான் எழுப்புதலை எதிர்பார்க்கவில்லை. கர்த்தருடைய வருகையை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன். (**கிறிஸ்துவின் மணவாட்டியின் காணக்கூடாத இணைப்பு,** பக்கம்.9, பத்தி.2, நாள்.25.11.1965) பாருங்கள் 1965 ல் வருகை சமீபமாயிருக்கிறது என விசுவாசிக்கிறோம் என்கிறார். ஆனால் அது நடைபெறவில்லை.

4. சபையே, அவர் இந்நாட்கள் ஒன்றில் வருவார். அவர் முதல்தரம் வந்தது எவ்வளவு நிச்சயமோ, அவ்வளவு நிச்சயமாய் மறுபடியும் வருவார். எல்லாவற்றையும் ஆயுத்தப்படுத்துங்கள். உங்களை பதரிலிருந்து பிரித்துக்கொள்ளுங்கள். எதிர்நோக்குடன் இருங்கள். (**கிறிஸ்துவின் மணவாட்டியின் காணக்கூடாத இணைப்பு,** பக்கம்.72, பத்தி.1, நாள்.25.11.1965) பாருங்கள் 1965 ல் எதிர்பார்ப்பு, ஆனால் நடைபெறவில்லை.

5. எடுத்துக்கொள்ளபடுதலாவது நம் முன்னிருக்கும் இந்நாட்களில் பரலோகத்தை நோக்கி புறப்படும் அக்காட்சி எத்தகைய பவனியாயிருக்கும். வரப்போகும் அந்த எடுத்துக்கொள்ளப்படுதலின் நேரத்திற்காக நாம் ஆவலுடன் எதிர்நோக்கி கொண்டிருக்கிறோம். (**ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படுதல்** பக்கம்.54, பத்தி.23, நாள்.04.12.1965) கவனியுங்கள் 1965 ல் எதிர்பார்ப்பு, ஆனால் நடைபெறவில்லை.

6. கடைசி நாட்களில் மறுபடியுமாக மனுஷகுமாரன் அதே விதமான குழுவுக்கு ஆபிரகாமின் ராஜரீக சந்ததிக்கு, அக்கினி வருவதற்கு முன்பு வெளிப்படுவார். அதற்கு பின்பு சபையானது சாட்சிகள் எவரையுமே பெறவில்லை. ஆபிரகாமும் அவனை சேர்ந்தவர்களும் பெறவில்லை. அதன்பின்பு அவர்கள் எதிர்பார்த்திருந்த வாக்குதத்தம் பண்ணப்பட்ட குமாரன் நேரடியாக கொண்டுவரப்பட்டார். சபையும் அவ்வாறே வாக்குதத்தம் பண்ணப்பட்ட

குமாரனை நோக்கி உள்ளது. **இந்த ஊழியத்தின் நாட்களுக்கு பின் அவர் வருவார். அவர் வானங்களில் வெளிப்படுவார். (நான் கேள்விப்பட்டேன், இப்பொழுது காண்கிறேன்.** பக்கம்.37, பத்தி.112,113, நாள்.27.11.1965) பிரியமானவர்களே இந்த ஆறாவது பகுதியை கவனியுங்கள். **இங்கு சகோ.பிரன்காம் இந்த ஊழியத்தின் நாட்களுக்கு பின் அவர் வருவார் என்று கூறுகிறார்.** இதிலிருந்து முன்பு நாம் பார்த்த ஏழாம் தூதன் தன் செய்தியை அளிக்கும்போது வருகிறார் என்பது தவறாகும். 1965 டிசம்பர் வரை சகோ. பிரன்காமின் ஊழியம், அந்த ஊழியத்தின் போது எடுத்துக்கொள்ளப்படுதல் நடைபெறவில்லை. கர்த்தர் வரவுமில்லை. ஒருவேளை இன்னும் 100 ஆண்டுகள் கர்த்தர் வராமல் இருக்க கூடும் என்றும் தீர்க்கதரிசி கூறுகிறார். ஆக இந்த பேலியாள் மக்களின் உபதேசம் கர்த்தர் வந்துவிட்டார், சபை எடுத்துக்கொள்ளப்படுதல் நடந்துவிட்டது என்பது யாவும் லௌகிக சம்பந்தமான ஞானம். இப்பொழுது இந்த உபதேசத்தில் தான் சகோ.ஜீவஜெயம் காணப்படுகிறார். கவனியுங்கள் 1965 வரை எடுத்துக்கொள்ளப்படுதல் நிகழவில்லை என்பது தீர்க்கதரிசிகளின் செய்திகளிலிருந்து உறுதிசெய்யபட்டுவிட்டது. ஆனால் நமது மத்தியில் உள்ள குள்ளநரி கூட்டங்களில் கோவை சகோ.கே.ராஜா, சென்னை சகோ.ஜீவஜெயம், பட்டாபிராம் சகோ.எட்வர்டு, மும்பை டேனியல் கிறிஸ்டியான் போன்றோர் சபைக்காலம் முடிந்துவிட்டது, எடுத்துக்கொள்ளப்படுதல் நடந்து விட்டது என்றும் மற்றொரு கூட்டத்தார் பிரன்காம் மட்டும் தனிப்பட்ட முறையில் உயிர்தெழுந்துவிட்டார் என்று கூறுவது வஞ்சிக்கத்தக்கதான ஒரு உபதேசம். கள்ளகபடமுள்ள வேலையாட்களின் உபதேசம். இவர்களுக்கு செவி கொடுத்து மோசம் போகாதீர்கள். வஞ்சிக்கிறவன் எக்காளம் ஊதும் போது அவன் பின் யார் செல்வார்? வஞ்சிக்கப்பட உள்ளவர்களே.

30. ஏற்கெனவே 2000 வருடத்தில் புதுக்கோட்டை ஜெயராஜ், சென்னை பட்டாபிராம் எட்வர்டு, நெல்லை மணி (இந்நாட்களில் பெங்களூரில் இருக்கிறார்) போன்றவர்கள் இந்த உபதேசத்தில் விழுந்தார்கள். அவர்களுக்கு பின் சென்றவர்கள் சிதறடிக்கப்பட்டு படுகுழியில் விழுந்தார்கள். அப்பொழுது 2000, ஆகஸ்ட் மாதம் 12 பக்கங்களை கொண்ட ஒரு நிருபத்தின் மூலமாக அவர்களை எச்சரித்தேன். ஆனாலும் யாரும் செவிகொடுக்கவில்லை. இருதயத்தில் உணர்ந்து குணப்படாமல் போனார்கள். 2005 ஆம் ஆண்டு கோவை கே.ராஜா இந்த உபதேசத்தில் விழுந்தார். அவர் பாதையில் பலர் மயங்கி திரிந்து அதமானார்கள். அப்பொழுது இதுகுறித்து அவருடைய இந்த உபதேசம் தவறு என மே-ஆகஸ்ட் 2005 ல் ஒரு செய்தி நிருபத்தின் வாயிலாக சுமார் 60 பக்கங்கள் கொண்ட செய்தி ஒன்றின் வாயிலாக சகோ.கே.ராஜாவுக்கு ஒரு மரண அடி கொடுத்தேன். இப்பொழுது சுமார் 14-18 ஆண்டுகளுக்கு பிறகு சகோ.ஜீவஜெயம் இந்த உபதேசத்தில் புரண்டு கொண்டிருக்கிறார். இவர்கள் அனைவரும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகளாக காணப்படுகின்றனர். பாருங்கள் தேவனுடைய வார்த்தையுள்ளவர்களே தேவனுடைய வார்த்தையை உண்மையாய் சொல்ல போதிக்கமுடியும். இவர்கள் அனைவரும் எப்பொழுதுமே ஜீவனுள்ள தேவனுடைய வார்த்தைகளை புரட்டுகிறவர்களே. கர்த்தர் இந்த மட்டைகள் அனைவரையும் தேவனுடைய வார்த்தையையோ, இக்காலத்திற்குரிய செய்தியையோ எடுத்து செல்ல அனுப்பியது இல்லை. ஆதலால் தானே இவர்கள் பிசாசின் பிடியில் இருந்துக்கொண்டு மனிதர்களுக்கு பதிலாக யூடியூபை கொண்டு பிரசங்கம் செய்கிறார்கள். இவர்களது கிரியைகள் இவர்கள் யார் என்பதை வெளிப்படுத்துகிறதே. இவர்கள் ஜனங்கள் மத்தியில் தங்களை பிரபலமாக்கி கொள்ள முயற்சிக்கிறார்கள். ஆனால் கர்த்தரோ இவர்களுக்கு வேதவாக்கியங்களின் அர்த்தத்தை, செய்தியின் அர்த்தத்தை, அதில் உள்ள மறைபொருட்களை மறைத்துவிடுகிறார். பிரியமானவர்களே கடைசியாக நீங்கள் அனைவரும் கர்த்தருடைய விசாரிக்கப்படும் நியாயத்தீர்ப்பு நாளில் உங்கள் மீது பொல்லாப்பு வராதபடிக்கு உங்களை காத்துக்கொள்ள ஜாக்கிரதையாயிருங்கள். வீண்பந்தா, பெருமை பாராட்டாதீர்கள். உங்களை சார்ந்து உங்கள் உபதேசங்களுக்கு செவிகொடுக்கும் உங்கள் சிநேகிதர்கள் யாவரும் வெட்கப்பட்டு போனார்களே.

31. காரியத்தின் கடைத்தொகையானது : நான் எவ்வளவு தான் சத்தியத்தை குறித்து இக்காலத்திற்குரிய செய்தியை குறித்து, அதற்காக என்னை அர்பணித்து எழுதினாலும், பேசினாலும் இந்த ஜனங்கள் அதை கேட்கவும், அதற்கு செவிகொடுக்காமலும் போய் தங்கள் பொல்லாத இருதயத்தின் யோசனையின்படியும், கடினத்தின் படியும் நடந்து முன்னிட்டு அல்ல, பின்னிட்டு போகிறதையே காண்கிறேன்.

32. தீர்க்கதரிசியின் செய்தி இவ்வாறாக கள்ளகபடமுள்ள வேலையாட்களால் ஏனோதானோ என்று மொழிப்பெயர்க்கப்பட்டு, அதன்விளைவாக தேவனுடைய நாமம் மற்றும் செய்தி தூஷிக்கப்படுகிறதே என எண்ணி ஆத்துமவியாகுலத்தில் சோர்ந்திருந்த வேளையில் எரிகின்ற கொள்ளியில் எண்ணெய் வார்ப்பது போன்று மற்றொரு சம்பவம் நடந்தது. ஆகஸ்ட் தொடக்கத்தில் பலரால் தமிழில் மொழிப்பெயர்க்கப்பட்ட செய்திகள் எனக்கு சில கிடைத்தது. அதில் ஒன்றை கரத்தில் எடுத்து பக்கங்களை புரட்டினேன். அதாவது ஒரு பார்வை. எனது பார்வையில் ஒரு வார்த்தை விழுந்தது. செய்தியின் பெயர் **தரித்து நின்று கர்த்தர் செய்யும் இரட்சிப்பை பாருங்கள்.** இது சகோ.ஜெபக்குமார் அவர்களால் மொழிப்பெயர்க்கப்பட்டு சகோ.பினேகாஸ் அவர்களால் வெளியிடப்பட்டிருந்ததாயிருந்தது. நான் பலமுறை இந்த சகோ.ஜெபக்குமார் தீர்க்கதரிசியின் செய்திகளை மொழிப்பெயர்க்க ஒரு தகுதியற்ற நபர் என்று எச்சரித்துள்ளேன். அது யாருடைய செவிகளிலும் விழவில்லை. இப்பொழுது இந்த செய்தியை புரட்டும் போது என் பார்வையில் விழுந்தது : **ஓ தேவனே, பசி தாகம் உள்ளவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் நிறையப்படுவார்கள்** என்பது உம்முடைய வாக்குத்தத்தமாக உள்ளது என்று மொழிப்பெயர்க்கப்பட்டிருந்தது. உடனே இந்த மனுஷனை கொண்டு செய்தியை மொழிப்பெயர்க்கிறார்களோ அவர்களைத்தான் கடிந்துக்கொள்ள வேண்டும், இவரை கடிந்துக்கொள்வதில் இனி பிரயோஜனம் இல்லை என

நினைத்து சகோ.பினேகாஸ் அவர்களை கைபேசியில் தொடர்பு கொண்டேன். மேலும் அவர்களது வெளியீடு புத்தகங்களையும் கேட்டேன். அப்பொழுது அவர் என்னை கூடிய சீக்கிரத்தில் எனது இல்லத்தில் வந்து சந்திப்பதாகவும், அப்பொழுது அவருடைய வெளியீடுகளை கொண்டு வருவதாக கூறினார். அதனால் மேற்கொண்டு அவரிடம் நான் எதுவும் பேசவில்லை. என்னை நேரில் சந்திக்க வரும்போது பேசிக்கொள்ளலாம் என விட்டுவிட்டேன்.

33. இப்பொழுது உங்கள் அனைவருக்கும் இங்கு சகோ.பிரன்காம் மத்.5:6 குறிப்பிடுகிறார் என தெரியும். அது **நீதியின் மேல் பசி தாகம் உள்ளவர்கள் பாக்கியவான்கள் : அவர்கள் திருப்தி அடைவார்கள்** என எவ்வளவு அழகாக வடிவமைக்கப்பட்டுள்ளது என்பதை அறிவீர்கள். சகோ.ஜெபக்குமாருக்கு இந்த வசனத்தை குறித்து அறிவு இல்லையா? அறிவு இருந்திருந்தால் திருப்தி அடைவார்கள் என்பதை நிறையப்படுவார்கள் என மொழிப்பெயர்த்திருக்க மாட்டாரே? வேதத்தையும், செய்தியையும் அறியாதவர்களை, உலகத்திற்குரியவர்களை கொண்டு மொழிப்பெயர்த்தால் இப்படித்தான் தாறுமாறுகள் நடந்துக்கொண்டிருக்கும். என்னுடைய ஆலோசனைக்கு செவிகொடுத்து இப்படிபட்டவர்களை விட்டு விலகியவர்களில் ஒருவர் திருச்சி சகோ.லாரன்ஸ் மாத்திரமே. அவரே ஆவியானவர் சத்தியத்தின் பாதையில் வழிநடத்தினதால், பரிசுத்த ஆவி அவரிடம் கிரியை செய்ததால் தவறை திருத்திக்கொண்டார். ஆக இந்த மொழிப்பெயர்ப்பை படித்தவுடன் புத்தகத்தை ஒதுக்கி வைத்து விட்டு இனி இதை படிக்க வேண்டாம் என முடிவு எடுத்தேன். மிக்க ஆரோக்கியமாக தமிழில் உபயோகப்படுத்தப்பட்டுள்ள வார்த்தையை இவர் தாறுமாறாக்கி விட்டார். ஆனாலும் சில நாட்களுக்கு பின் அவைகளை மேலும் படிக்க தூண்டப்பட்டேன். ஆரம்ப பத்திலேயே தாறுமாறாக இருந்தது. ஆதலால் அதை படிக்க முற்றிலுமாக ஒதுக்கி வைத்துவிட்டேன். முதல் பத்தியில் உள்ள தாறுமாறுகளை படிக்கத்தான் ஆவியானவர் என்னை தூண்டியிருக்கிறார் என நினைத்துக்கொண்டேன். The Blessed Lord Jesus என சகோ.பிரன்காம் பேசுகிறார். இவர் இதை அப்படியே **ஆசீர்வதிக்கப்பட்ட கர்த்தராகிய இயேசு** என மொழிப்பெயர்த்துள்ளார். ஆசீர்வதிக்கப்பட்ட கர்த்தராகிய இயேசு என்றால், இவரை ஆசீர்வதித்த அந்த நபர் யார்? யாரால் கர்த்தராகிய இயேசு ஆசீர்வதிக்கப்பட்டார்? சிருஷ்டிகரை ஆசீர்வதிப்பவர்கள் அவருடைய சிருஷ்டிகளாக இருக்கமுடியுமா? பொதுவாக மொழிப்பெயர்ப்பாளர்களுக்கு வேதத்தை, செய்தியை குறித்து அறிகிற அறிவு, புத்தி வேண்டும். அது இல்லாவிட்டால் இப்படிப்பட்டதான குழப்பமான மொழிப்பெயர்ப்புதான் கிடைக்கும். இந்த பொருள் குறித்து ஏற்கெனவே பெரவலூர், சென்னை சபையை கண்டித்து நவம்பர் 2004 ல் ஒரு நிருபத்தை எழுதியுள்ளேன். இப்பொழுது இந்த இடத்தில் **ஸ்தோத்தரிக்கப்பட்ட கர்த்தராகிய இயேசு** என்று மொழிப்பெயர்ப்பதுதான் தேவனுக்கடுத்த கனத்தை கொடுப்பதாகும். ஆசீர்வதிக்கப்பட்ட கர்த்தராகிய இயேசு என்பது தேவதூஷனம் ஆகும். தேவனுடைய நாமத்தை தூஷிப்பதுதானே சாத்தானுக்கடுத்த பணி. அதைத்தான் இந்த மொழிப்பெயர்ப்பாளர் செய்துள்ளார். உதாரணமாக நீங்கள் தானி.2:19 யை பார்த்தால், இங்கு Then Daniel Blessed the God என இருக்கும். பாருங்கள் தானியேல் தேவனை ஆசீர்வதித்தான் என்றால் அது அயோக்கியதனம், தேவதூஷனம். ஆனால் இதன் மொழிப்பெயர்ப்பை கவனியுங்கள். **தானியேல் பரலோகத்தின் தேவனை ஸ்தோத்தரித்தான்.** இதுதான் புத்தியுள்ள, புத்தியில்லாத கன்னிகைகளுடைய மொழிப்பெயர்ப்புக்கு எடுத்துக்காட்டு. அடுத்து Blessed be the Lord God of Heven from everlasting to everlasting தமிழ் மொழிப்பெயர்ப்பை கவனியுங்கள். **இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் அநாதியாய் என்னென்றைக்கும் ஸ்தோஸ்தரிக்கப்படத்தக்கவர். இதை நாம் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் அநாதியாய் என்னென்றைக்கும் ஆசீர்வதிக்கப்பபட்டவர்** என்று மொழிப்பெயர்த்தால் அது எப்படி இருந்திருக்கும் என யோசித்து பாருங்கள். வேதவாக்கியங்களின் படி இக்காலத்திற்குரிய செய்தியின்படி தங்களை காத்துக்கொள்ளாதவர்களை கொண்டு செய்திகளை மொழிப்பெயர்த்தால் இந்த கதிதான். மனுஷன் தேவனை துதிக்கலாம், ஸ்தோத்தரிக்கலாம். ஆனால் மனிதன் தேவனை ஆசீர்வதிக்க முடியாது. Blessed என்ற வினைச்சொல் ஆசீர்வதித்தார், ஸ்தோஸ்தரிக்கப்பட்டவர் என்ற உபயோகத்தில் பரிசுத்த வேதாகமத்தில் உள்ளது.

மூன்றாவதாக : நேகே.9:5 நீங்கள் எழுந்திருந்து அநாதியாய் என்றென்றைக்கும் இருக்கிற உங்கள் தேவனாகிய கரத்தரை ஸ்தோத்தரியுங்கள். இது ஆங்கிலத்தில் Standup and Blessed the Lord, Your God, forever and ever என உள்ளது. அடுத்து உம்முடைய மகிமையுள்ள நாமத்திற்கு ஸ்தோத்திரம். இது ஆங்கிலத்தில் Blessed be the Glorious Name என உள்ளது. இங்கு ஜனங்கள் தேவனுடைய நாமத்தை ஸ்தோத்தரித்தபோது Bless, Blessed என்ற ஆங்கில வினைச்சொல் காணப்படுகிறது.

நான்காவதாக இவருடைய மதிகேட்டை மற்றொரிடத்தில் கவனியுங்கள். **பிறருக்காக செய்திருக்கின்ற அவருடைய மகத்தான பாடுகள், மரணம், அடக்கம், உயிர்தெழுதல் மற்றும் பரிசுத்த ஆவியானவரின் வருகை ஆகியவற்றின் மூலமாக இந்த ஆசீர்வாதங்கள் சாத்தியமாயிற்று** என உள்ளது. இங்கு **பிறருக்காக செய்திருக்கிற** என்ற வார்த்தைக்குரிய ஆங்கிலச்சொல் செய்தியில் எங்கே? இது ஒன்றை கூட்டுவதற்கும் குறைப்பதற்கும் சமானம் அல்லவா? இவர் ஒன்றை செய்தியோடு கூட்டுகிறார். ஆக இந்த செய்தியில் 27 ஆம் பக்கம் 30 வது பத்தி : ஓ தேவனே பசி தாகம் உள்ளவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் நிறையப்படுவார்கள் அடுத்து பக்கம்.1 பத்தி.1 ஆசீர்வதிக்கப்பட்ட கர்த்தராகிய இயேசுவுக்காக மேலும் பக்கம்.1 பத்தி.1 பிறருக்காக செய்திருக்கின்ற என்ற மாறுபாடுகளை கண்ட உடனே புத்தகத்தை அப்படியே மூடி வைத்துவிட்டேன்.

34. சகோ.ஜெபக்குமார் மொழிப்பெயர்த்து சகோ.பினேகாஸ் வெளியிட்டுள்ள மற்றதொரு செய்தி ஒன்றை காணலாம் என சென்றேன். எனது கரத்தில் **மேசியாவின் அடையாளம்** என்ற புத்தகம் கிடைத்தது. பொதுவாக

என்னைக்குறித்து நீங்கள் என்ன நினைத்தாலும் சரி, நான் புத்தகங்களில் தவறுகளை கண்டுபிடிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு படிக்க மாட்டேன். ஆனால் அதை நான் தியானித்துக்கொண்டு வரும்போது ஒரு இடத்தில் தவறு காணப்படுமாகில், அந்த தவறைத்தாண்டி படிக்க எனது மனது செல்லாது. தவறு என்று கண்டதை சரி செய்த பின்தான் மேற்கொண்டு படிக்க செல்வேன் அல்லது ஒன்று தவறு என்று கண்டதை குறியிட்டுச் சென்று, பின் மீண்டும் தொடர்ந்து படிக்க செல்லுவேன். பின் மொத்தமாக தவறுகளை சரிசெய்ய பார்ப்பேன். அவ்வாறாக இந்த மேசியாவின் அடையாளம் செய்தி மொழிப்பெயர்ப்பை தியானித்தேன். (அ) பக்கம்.28 பத்தி.84 யை கவனியுங்கள். **அந்த சாமியார்களின் சரீரத்தை தோண்டி எடுத்து, அதை ஆற்றில் எறிந்து போட்டார்கள்** என இருந்தது. இது ஆங்கிலத்தில் You dug up them priest's body and throwed it in the river என இருந்தது. இங்கு Priest's என்பதை சாமியார் என அநாகரீகமாக மொழிப்பெயர்த்துள்ளார். இந்த மொழிப்பெயர்ப்பு சகோ.ஜெபக்குமாருக்கே வெட்கமாக தோன்றவில்லையா? பரிசுத்த வேதாகமத்தில் Priest என்பது ஆசாரியர்கள் என மொழிப்பெயர்க்கப்பட்டுள்ளது. இவர் அந்த ஆசாரியரின் சடலங்களை தோண்டி எடுத்து என மொழிப்பெயர்த்திருந்தால் அது மிக்க வேதப்பூர்வமாக இருந்திருக்கும். (ஆ) அடுத்து பக்கம்.32, பத்தி.96 ல் இருமுறை **அவர் மாறாத இயேசு அல்ல** என ஆங்கில வார்த்தை He wouldn't be the same Jesus, He is n't the same Jesus என்பதை மொழிப்பெயர்த்துள்ளார். **அவர் அந்த இயேசுவாக இருந்திருக்கமாட்டார், அவர் அதே இயேசு இல்லை என்று தானே இருந்திருக்க வேண்டும். ஆனால் இவரோ அதை இந்த மாறாத இயேசு** என மொழிப்பெயர்த்திருப்பது சரியான மொழிப்பெயர்ப்பாக இல்லை. (இ) அடுத்து பத்தி.98 ல் சீஷர்கள் (Caesars) இருந்த ரோமாபுரியிலும் என ஆங்கில சொல் In Rome with Caesars என்பதை மொழிப்பெயர்த்துள்ளார். இது சீசர்கள் என இருந்திருந்தால் அது சரியான மொழிப்பெயர்ப்பாக இருந்திருக்கும். பொதுவாக வேதாகமத்தில் Disciples சீஷர்கள் என மொழிப்பெயர்க்கப்பட்டுள்ளது. இந்த Caesars என்பது ரோம பேரரசர் சீசரை சார்ந்தவர்கள் என்பதாகும். இயேசுவின் சீஷர்கள் அல்ல.

35. ஆகஸ்ட் 28 தேதி மதியம் எனக்கு வாட்ஸ் ஆப் செய்தி ஒன்று வந்தது. அதில் சகோ.ஜெபக்குமார் அவர்களும், VOGR சகோ.பிரபு அவர்களும் நாம் மேற்கண்ட பத்தி.248 மற்றும் பத்தி.256 விஷயமாக பேச்சுவார்த்தை நடப்பதாக காணப்பட்டது. சகோ.ஜெபக்குமார் கடைசி தூதன் செய்தி கொடுத்துக்கொண்டிருக்கும்போது எடுத்துக்கொள்ளப்படுதல் நடந்து விட்டதாக கூறுவதை கேட்டேன். இவரும் நான் முன்பே கூறிய அழுகின கூட்டத்தில், சபைக்குள்ளே மாய்மாலக்காரரை கொண்ட கூட்டத்தில் ஒருவர் தான். இதில் தயக்கம் எதுவும் கிடையாது. 28.08.2019 அன்று சகோ.ஜெபக்குமாருடன் தொடர்பு கொள்ள நினைத்தேன். அவர் மொபைல் நம்பர் என்னிடத்தில் இல்லை. ஆதலால் சகோ.பினேகாஸை தொடர்பு கொண்டு அவருடைய நம்பர் கேட்டேன். இவருடன் நான் சில தினங்களுக்கு முன்பு தொடர்பு கொண்டேன் என்பதை முன்பே எழுதியிருக்கிறேன். இந்நிலையில் நான் அவரோடு தொடர்பு கொண்டேன். அந்த வேளையில் இந்த மதிகெட்டவனுடைய மதிகேடான கேள்விகளினால் எங்கள் இருவருக்கும் இடையே நான் விரும்பாத மிக்க காரசாரமான வார்த்தைகளினால் பேச்சு முடிந்தது. ஒரு பக்கம் எனக்கு மூடனுக்கு அவன் மதியீனத்தின்படி மறுஉத்தரவு கொடாதே. கொடுத்தால் நீயும் அவனைப்போல ஆவாய் என்பதை உணர்ந்தேன். ஆனால் மூடனுக்கு அவன் மதியீனத்தின்படி மறுஉத்தரவு கொடு, கொடாவிட்டால் அவன் தன் பார்வைக்கு ஞானியாய் இருப்பான் என்ற வசனத்தின் அடிப்படையில் அவருக்கு நான் கடுமையான பதில் கொடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. பாருங்கள் நான் சகோ.ஜெபக்குமார் நம்பரை இவரிடம் கேட்டேன். ஒன்று கொடுத்திருக்க வேண்டும், இல்லாவிட்டால் விரும்பம் இல்லை அல்லது நம்பர் தன்னிடம் என கூறிவிட்டால் பிரச்சனை முடிந்திருக்கும். இதை விட்டுவிட்டு தன்னுடைய அகந்தையினால் நான் யார்? என்னுடைய ஊழியம் என்ன? எனக்கு எதற்காக சகோ.ஜெபக்குமார் நம்பர் வேண்டும்? நான் எந்த சபைக்கு செல்லுகிறேன்? எனது பாஸ்டர் யார்? நான் என் பெயர் யோசுவா என்று மட்டும் சொன்னது ஏன்? ஏன் என்னுடைய பெயரை காலேப் யோசுவா என்று கூறவில்லை? நான் ஏன் அவ்வாறு மாயம்மாலம் பண்ணினேன் என்றார். மேலும் நான் இவரை ஒரு காலக்கட்டத்தில் WBNS கோடம்பாக்கத்தில் சந்தித்ததாகவும், இவர் பாத்ரூம் சென்ற சமயத்தில் நான் அவருக்கு தெரியாமல் புத்தகம் கூட வாங்காமல் அந்த இடத்திலிருந்து இவருக்கு பயந்து ஒடி விட்டதாகவும் சப்பை கட்டினார். ஐந்துவகை ஊழியத்தில் என்னுடைய ஸ்தானம் என்ன? தீர்க்கதரிசி செய்திகள் சுமார் 1200 உண்டு. இதில் ஏதாவது ஒன்றை நான் மொழிப்பெயர்த்து வெளியிட்டு இருக்கிறேனா? பிறரை கடிந்துக்கொண்டு புத்தி சொல்ல பவுலுக்கும் பிரன்காமிற்கும் தகுதி உண்டு, எனக்கு என்ன தகுதி? இப்படியாக கேள்விக்குமேல் கேள்வி கேட்டு என்னோடு போராடினார். நான் தக்க பதில் அவரை கடிந்து, கண்டனம் பண்ணி கொடுத்துக்கொண்டுதான் இருந்தேன். முடிவில் நான் உங்களை 1.09.2019ல் மாலை வந்து சந்திக்கிறேன் என்றார். நானோ 30,31 ஆகஸ்ட் மற்றும் 1 செப்டம்பர் இதர வேலைகளில் விட்டிற்கு வெளியே உள்ளேன் ஆதலால் உங்களை காணமுடியாது என்றேன். ஆதலால் செப்டம்பர் 2 ம் தேதிக்கு பிறகு வாருங்கள் என்றேன். பாருங்கள் இந்த மடயனுடைய ஆணவத்தை? நீங்கள் எங்கு செல்கிறீர்கள் என்று சொல்லுங்கள் நான் அங்கு வந்து உங்களை சந்திக்கிறேன் என்றார். இவ்வாறாக தேவையில்லாத காரியங்களை பேசிக்கொண்டு அவ்வப்போது நகட்டு சிரிப்பு சிரித்துக்கொண்டே இருந்தார். நான் பிசாசுதான் இப்படி இவனை சிரிக்க வைக்கிறது என்று புரிந்துக்கொண்டேன். இருவரும் ஒருவரை ஒருவர் நீ பிசாசு, பிசாசு என திட்டி தீர்த்துக்கொண்டோம். சுமார் அரைமணி நேரத்திற்கு மேல் வாதம். யார் இந்த பினேகாஸ்? இலவசமாக புத்தகம் வெளியிடுகிறேன் என்கிறார். தான் வெளியிடும் புத்தகத்தில் தன் விலாசத்தை குறிப்பிட முடியாத, விலாசம் இல்லாத நடைமேடை வாசியா? தான் வெளியிடும் புத்தகத்தில் தன்னுடைய விலாசத்தை தெரிவிப்பதில்லை. உண்மையாகவே நான் யாரிடமும் இவ்வளவு

கடினமாக பேசியது இல்லை. மூடனுக்கு அவன் தன்னை ஞானி என்று எண்ணக்கூடாது என்பதற்காக கடினமாக நடந்துகொண்டேன். பிசாசை எதிர்த்து நின்று அதை அதட்டி அதை அடக்கவே முயற்சித்தேன். இந்நிலையில் வெளியே சென்றிருந்த எனது மகள் பஸ்டாப் வந்துவிட்டதாகவும், தன்னை வீட்டிற்கு அழைத்து செல்ல உடன் புறப்பட்டு வர மொபைலில் அழைத்தார். ஆதலால் நான் இவருடன் பேசுவதை நிறுத்திக்கொண்டு என்னுடைய பணியில் ஈடுபட்டேன்.

36. ஆங்கிலத்திலிருந்து மொழிப்பெயர்த்து தமிழில் செய்தி வெளியிடுகிறார்கள் நல்லதுதான். இதன் பிரதான தலைப்பாக The spoken word – உரைக்கப்பட்ட வார்த்தையே மூல வித்து – வில்லியம் மாரியன் பிரன்காம் என்று அட்டைபகுதி முன்புறத்தில் எழுதுகிறார்கள். சகோ.பிரன்காமின் உரைக்கப்பட்ட வார்த்தை, பிரசங்கிக்கப்பட்ட செய்தி தேவனுடைய மூல வித்தாகுமா? சகோ.ஜெபக்குமார் அவர்களே சகோ.டேனியல் சம்பத்குமார் அவர்களே உங்களுக்கு ஞானம் இல்லையா? தேவனுடைய நாமத்தை ஏன் தூஷிக்கிறீர்கள்? தூதனுடைய செய்தியை ஏன் தூஷிக்கிறீர்கள். இது ஏழாம் தூதனுடைய சத்தம் தானே? இந்த வேளையில் சகோ.ஜெபக்குமார் அவர்களே **இரண்டாம் அற்புதம்** என்ற செய்தியில் The spoken word – வில்லியம் மாரியன் பிரன்காம் என போட்டிருக்கிறீர்கள். இதில் தவறு இல்லை. சகோ. மோசஸ் தயானந்தம் – தீர்க்கதரிசி பிரன்காம் மூலம் வெளிப்படுத்தப்பட்ட தேவனுடைய வார்த்தை என்கிறார், இதையும் தவறு என கூறமுடியாது. ஆனால் சரியான தலைப்பு **ஏழாம் தூதனுடைய சத்தத்தின் நாட்களிலே** என்று மட்டும் தான் இருக்க வேண்டும். இந்த தலைப்பு தான் வேதப்பூர்வமானது. Voice of God என்று தலைப்பு கொடுப்பது தேவதூஷனம். பிரியமானவர்களே நலமானதை, ஆரோக்கியமானதை பற்றிக்கொள்ளுங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

37. அடுத்து இங்கு ஒரு முக்கிய தகவலை கொடுக்க விரும்புகிறேன். தொடக்கத்தில் தீர்க்கதரிசியினுடைய செய்திகளின் தலைப்பு The spoken word, by William Marrion Branham என இருந்தது. இதன்பின்தான் இது The Voice of God என மாற்றப்பட்டது. இது ஒரு தேவதூஷனமே. பாருங்கள் சகோ.பிரன்காமின் செய்திகள் அனைத்தும் தேவனுடைய சத்தம் ஆகாது. சகோ.பிரன்காமின் நித்திரைக்கு பின்புதான் இப்படிப்பட்ட அட்டூழியங்கள் யாவும் அரங்கேற்றப்பட்டன. இவர்கள் சகோ.பிரன்காமை தேவனாக்கி விட்டார்கள். ஆனால் அவரோ தன்னை தேவனாக்கவில்லை. சகோ. பிரன்காமுக்குப்பின் அவரை சார்ந்தவர்களை நம்பமுடியவில்லை. சகோ.பிரன்காமின் செய்திகள் தேவனுடைய சத்தம் என்றால் அது சர்வத்துக்கும் வல்லதேவனுடைய சத்தமாகும். தேவனுடைய வார்த்தை சகோ.பிரன்காமிற்கு வந்தது என்று நாம் கூறலாம். ஆனால் அவருடைய செய்தியோ தேவனுடைய சத்தம் என்று கூறுவது தேவதூஷனமாகும். சகோ.பிரன்காம் தன் பிரசங்கங்களுக்கு முற்றிலுமாக தேவனுடைய சத்தத்தை சார்ந்திருக்கவில்லை. பரிசுத்த ஆவியின் ஏவுதலையும் சார்ந்திருக்கவில்லை. அவருடைய பிரசங்கங்களில் தவறுகள் உண்டு. அதை அவ்வப்போது திருத்துகிறார். அவர் பிரசங்கங்களில் பலர் பிரசத்திப்பெற்ற பிரசங்கிகளின் கருத்துக்களும், அவருடைய சுய கருத்துக்களும், எண்ணங்களும், சிந்தனைகளும் உண்டு. ஆனால் தேவனுடைய சத்தத்தில் மனுஷருடைய கருத்துக்களுக்கும், அபிப்பிராயங்களுக்கும் அனுமானங்களுக்கும் அனுபவத்துக்கும் இடமேயில்லை. **இயேசு கிறிஸ்துவின் வெளிப்படுத்துதல்**, பாகம். 2, பக்கம்.833, பத்தி.43, “அவர் எனக்கு காண்பித்த ஒரு தரிசனத்தின் அடிப்படையிலும், காலமானது முன்னேறி சென்றுகொண்டிருக்கிறதான அடிப்படையிலும், அது 1933 க்கும் 1977 க்கும் இடையில் இருக்கலாம் என்று அனுமானத்தின் பேரின் முன்னுரைக்கிறேன். நான் அனுமானத்தின் பேரில் முன்னுரைக்கிறேன். எனவே நான் தவறாகவும் இருக்ககூடும் என்கிறார். இது தேவனுடைய சத்தமா? புத்தியுள்ளவர்கள் சிந்திக்க கடவர்கள். பிரியமானவர்களே இப்படியாக நான் பக்கம் பக்கமாக எழுதிக்கொண்டே போகலாம். ஆனால் என்னால் அது முடியாத காரியமாக இருக்கிறது. இந்த தேவனுடைய சத்தம் குறித்து நான் ஜனவரி 2006 ல் எழுதிய ஐயோ! ஆபத்து! ஆபத்து!! Voice of God Recordings பிசாசின் கண்ணில் விழுந்ததே என்ற நிருபத்தை பெற்று தியானியுங்கள். ஆதலால் சகோ.பிரன்காமினால் பிரசங்கிக்கப்பட்ட செய்திகளுக்கு Voice of God என்று பெயரிடுவது பேய்தனத்துக்கடுத்தது, லௌகிக சம்பந்தமானது. அது தீது.

38. ஆவிக்குரியவன் எல்லாவற்றிலும் ஆராய்ந்து நிதானிக்கிறான். ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். ஏழாம் சபைக்கால தூதனுடைய செய்தி ஒரு பரிபூரணமானது அல்ல. அதில் குறைபாடுகள் குழப்பங்கள் உண்டு. ஆதலால் எல்லாவற்றையும் சோதித்து பார்க்க வேண்டியதாயிருக்கிறது. செய்தியை புத்தக வடிவில் கொண்டுவந்தவர்கள் அதை கூட்டியும் குறைத்தும் கொண்டுவந்துள்ளார்கள். செய்தியை பிற மொழிகளில் மொழிப்பெயர்த்தவர்களில் பெரும்பாலானோர் தங்கள் லௌகிக ஞானத்தைக்கொண்டே மொழிப்பெயர்த்துள்ளார்கள். ஆதலால் அநேக இடங்களில் தவறுகள் உண்டு. செய்தியை பிரசங்கிப்பவர்களில் அநேகர் கள்ளகபடமுள்ள வேலையாட்களே. கர்த்தரால் ஏற்படுத்தப்பட்டவர்கள் அல்ல. தேவ சித்தத்திற்கு புறம்பாக தேவனுக்கென்று ஒரு சேவை செய்கிறவர்கள். ஆதலால் போதனைகளில் குழப்பங்கள். இந்த சூழ்நிலையில் சத்திய ஆவி மட்டுமே உங்களை சகலசத்தியத்திற்குள்ளும் வழிநடத்த முடியும். நீங்கள் அவரிடமிருந்து பெற்ற அபிஷேகம் தான் சகலத்தையும் குறித்து உங்களுக்கு போதிக்க முடியும்.

39. இந்த சூழ்நிலையில் என்னுடைய கணிப்பானது இந்த செய்திகளை மொழிப்பெயர்க்கும் கூட்டம், மொழிப்பெயர்த்த செய்திகளை வெளியிடும் கூட்டம் இரண்டுமே ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்தான் என்ற

பழமொழி பொருந்தும். இவர்களை திருந்தவே முடியாது. ஏனென்றால் செய்தியை குழப்புவதற்கென்றே இவர்கள் பிசாசினால் தெரிந்துக்கொள்ளப்பட்ட பாத்திரங்கள். இந்த அழுகிப்போன கூட்டத்திலிருந்து நாம் புசிப்பதற்கு நல்ல கனிகளை காண முடியாது. ஆனால் இவர்களால் தேவனால் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களை வஞ்சிக்கவே முடியாது. நலமானதை பற்றிக்கொள்ள கர்த்தர் உங்களுக்கு பிரகாசமான மனக்கண்களை கொடுப்பாராக ஆமேன்.

40. இந்த நிருபமானது செப்டம்பர் 9ஆம் தேதி பிரிண்டிங்க்கு சென்ற நிலையில், 10 ஆம் தேதி காலை சகோ.ஜெபக்குமார் மொழிப்பெயர்ப்பு **சாமியார்** (Priest's) **ஆசீர்வதிக்கப்பட்ட கர்த்தராகிய இயேசு** (The Blessed Lord Jesus) மீண்டும் என் சிந்தனைக்கு வந்தது. அதாவது நமது பார்லிமெண்டில் எம்.பிக்கள் அவரவர்கள் தாய் மொழியில் அல்லது ஹிந்தியில் அல்லது ஆங்கிலத்தில் பேசுகிறார்கள். அது தொழில்நுட்ப விஞ்ஞானத்தின் மூலம் அந்த நிமிடமே மொழிப்பெயர்க்கப்பட்டு, அதை அவரவர்கள் தங்கள் தாய் மொழியில் கேட்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. அமெரிக்கா சென்ற நமது பிரதமர் ஹிந்தியில் பேச, அதை அமெரிக்க ஜனாதிபதி அவரது தாய்மொழியாகிய ஆங்கிலத்தில் கேட்டு, பதில் ஒருவருக்கொருவர் பரிமாற்றிக்கொள்கிறார்கள். சம்பாஷிக்கிறார்கள். அந்த அளவுக்கு தொழில்நுட்ப ஆய்வுத்துறை / தொழில்துறை விஞ்ஞானம் வளர்ச்சி அடைந்துள்ளது. இந்த விஞ்ஞானத்துறை வளர்ச்சியின் அடிப்படையில் நமது செய்தி மொழிப்பெயர்ப்பாளர்கள் தீர்க்கதரிசியின் ஆங்கில செய்திகளை கம்பியூட்டரில் இறக்கம் செய்து கொண்டு, அதை ஜி போர்டு மொழிப்பெயர்ப்பாளர் பயன்பாடு (G Board Translators Apps) யை பயன்படுத்தி, அதன் மூலம் சபைக்கால தூதனுடைய ஆங்கில செய்திகளை தமிழில் இலகுவாக மொழிப்பெயர்த்து விடுகிறார்கள். அதன்பின் ஆங்காங்கு சற்று திருத்தம் செய்து கொள்கிறார்கள். ஆக இந்த மொழிப்பெயர்ப்பு பணி சாத்தானுடைய நவீன தொழில்துறைநுட்ப ஆய்வினால் மிக்க இலகுவாக முடிந்துவிடுகிறது. மனிதன் பல நாட்களாக உட்கார்ந்து மொழிப்பெயர்ப்பதை, இந்த தொழில்நுட்ப பயன்பாடு ஒரு சில மணி நேரத்தில் முடித்து விடுகிறது. தேவனுடைய ஆவியினால் ஏவப்பட்டு பேசப்பட்ட, எழுதப்பட்ட செய்திகளை ஒருவன் தேவ ஆவியினால் மொழிப்பெயர்க்கலாமேயன்றி தொழில்நுட்ப விஞ்ஞானத்தைக் கொண்டு மொழிப்பெயர்க்க கூடாது. அது செய்தியை தாறுமாறாக்கும். பாருங்கள் ஆசீர்வதிக்கப்பட்ட கர்த்தராகிய இயேசு இதற்கு ஒரு எடுத்துக்காட்டு. இந்த மொழிப்பெயர்ப்பினால் தேவனுடைய நாமம் தூஷிக்கப்படுகிறதா? மகிமைபடுகிறதா? சிந்தியுங்கள். இந்த மொழிப்பெயர்ப்பை நீங்கள் ஜி போர்டு மொழிப்பெயர்ப்பாளர்களின் பயன்பாட்டில் காணலாம்.

41. அடுத்து இதுகுறித்து சற்று ஆவிக்குரிய பிரகாரமாக மேலும் சிந்திக்கலானேன். அப்.2:6-8 வசனங்கள் என் சிந்தனைக்கு வந்தது. பெந்தெகொஸ்தே நாளன்று கலிலேயர் பேசுகிறதை, வானத்தின்கீழ் இருக்கிற சகல தேசத்தாரிலும் இருந்து அன்று எருசலேமுக்கு வந்திருந்த தேவபக்தியுள்ள யூதர்கள், மற்றும் சுமார் 17 தேசங்களிலிருந்து வந்தவர்கள், அவரவர்களுடைய ஜென்ம பாஷையிலே கேட்டார்கள். கலிலேயர் பேசுகிறதை எகிப்தியர்கள் அவர்கள் பாஷையிலும், ரோமாபுரியர் அவர்கள் பாஷையிலிலும், அரேபியர் அவர்கள் பாஷையிலும், இப்படியாக அவரவர்கள் தங்கள்தங்கள் ஜென்ம பாஷையிலே கேட்டார்கள். தேவனுடைய மகத்துவம் வெளிப்பட்டது. பரிசுத்த ஆவியின் வரங்கள் கிரியை செய்தது. மேலும் தீர்க்கதரிசனங்கள் நிறைவேறுதலுக்கடுத்த சம்பவங்களாகவும் இருந்தது. ஆனால் இப்பொழுது நம்முடையவர்களின் ஆங்கில – தமிழ் மொழிப்பெயர்ப்பு, சாத்தான் அவனுடைய இப்பிரபஞ்சத்திற்குரிய ஞானத்தைக்கொண்டு முன் நடந்ததுபோல் ஒன்றை பாவனை செய்வதாகும். அன்று தேவன் தம்முடைய ஆவியினால், தெய்வீக ஞானத்தைக்கொண்டு மகத்துவங்களை செய்தார். ஆனால் சாத்தானோ தனது தொழில்நுட்ப ஆய்வுகளை கொண்டு, தொழில்துறையின் ஞானத்தைக்கொண்டு தேவன் முன் நடப்பித்ததை இப்பொழுது பாவனையாக செய்கிறான். அன்று தேவனுடைய ஆவி, இன்று இப்பிரபஞ்சத்தின் ஞானம். ஆக நமது மொழிப்பெயர்ப்பாளர்கள் தேவ ஆவியினால் அருளப்பட்ட வேதவாக்கியங்களை, ஏழாம் தூதனுடைய சத்தத்தின் நாட்களிலே அவன் எக்காளம் ஊதப்போகிற போது வெளிப்படுத்தப்பட்ட தேவ ரகசியத்தை ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிற வசனங்களை, பரிசுத்த வேத எழுத்துக்களை, தேவ வசனங்களை சாத்தானுடைய தொழில்நுட்ப விஞ்ஞானத்தினால் பெற்ற உயிரற்ற தளவாடங்களைக்கொண்டு பிரசங்கிக்கிறார்கள், மொழிப்பெயர்க்கிறார்கள். இவர்கள் கர்த்தர் கொடுத்த ஞானத்தை கொண்டு அல்ல, பரத்திலிருந்து இறங்கி வருகிற ஞானத்தைக்கொண்டு அல்ல, மாறாக சாத்தானின் அறிவுபூர்வமான விஞ்ஞான வழிமுறைகளை கொண்டு, யூடியூப்பில் செய்தி கொடுக்கிறார்கள், ஜி போர்டு ஆப் மூலம் செய்திகளை மொழிப்பெயர்க்கிறார்கள். இதில் முக்கிய பங்கு கோவை சகோ. ராஜா, சென்னை சகோ.ஜீவஜெயம், நாகர்கோவில் சகோ.ஜெபக்குமார் போன்றவர்களுக்கு உண்டு. இவர்களுடைய கிரியைகள், தேவன் இவர்களை செய்திகளை பிரசங்கிக்க, செய்திகளை மொழிப்பெயர்க்க அழைத்ததும் இல்லை, அவர்களுக்கு கற்பித்ததுமில்லை என்பதை வெளிப்படுத்துகிறதே. நான் அறிந்த அளவில் சகோ.மோசஸ் தயானந்தம், VOGR மொழிப்பெயர்ப்புகள் நம்பத்தக்கதாக காணப்படுகிறது. ஏனைய மொழிப்பெயர்ப்புகள் யாவும் நம்பக்கூடிய தன்மை கொண்டதாகயில்லை. சகோ. மோசஸ் தாயனந்தம், VOGR – சகோ.பிரபு தங்கள் பணிகளை மிக்க பயபக்தியுடன், தேவனுக்கு பயந்து, தங்களை அர்ப்பணித்து செயல்படுவதை காண்கிறேன். அதேவேளையில் நான் இவர்கள் அனைவரையும் நேசிக்கிறேன். அவர்கள் மேல் வைத்துள்ள அன்பின் நிமித்தமாகவே அவர்களை கடிந்துக்கொள்கிறேன். ஏன்? அவர்கள் திருந்த வேண்டும் என்பதற்காகவே.

42. மேலும் கவனியுங்கள். இரண்டு பேர் ஒருமனப்பட்டிருந்தால் தான் ஒருமித்து நடக்க முடியும் (ஆமோஸ்.3:3) அதன்படி செய்தியாளனும், செய்தியாளனுடைய செய்திகளை மொழிப்பெயர்க்கிறவர்களும் ஒரே ஆவியில் ஒருமித்து, ஒருமனப்பட்டு காணப்படவேண்டும். இருமாடுகளைக் கொண்டு வண்டியை ஓட்டும்போது, இருமாடுகளும் ஒருமித்து
வண்டியை இழுத்து செல்ல வேண்டும். மற்றபடி வண்டி தாறுமாறாக ஓடும். இசை அமைப்பாளனும், பாடகனும் ஒரே நேர்க்கோட்டில் காணப்படவேண்டும். மற்றபடி இசையும் பாடலும் வெற்றியை தராது. கணவனும் மனைவியும் தங்கள் இல்லற வாழ்க்கையில் ஒருமித்து இருந்தால்தான் இல்லற வாழ்க்கை வெற்றி பெறும். ஆதலால்தான் செய்தியாளனுக்குள் இருந்த ஆவி, செய்தியை மொழிப்பெயர்ப்பவர்களிடத்திலும் காணப்படவேண்டும். ஜி போர்டு மொழிப்பெயர்ப்பாளர் பயன்பாடு கொண்டு அநேக செய்திகளை மிக இலகுவாக குறுகிய காலத்தில் மொழிப்பெயர்ப்பவர்கள் தங்கள் மொழிப்பெயர்ப்பில் மூல செய்தியில் உள்ள வல்லமையை / அனலை கொண்டுவர முடியாது. அது வெதுவெதுப்பாகவே காணப்படும். தேவன் தம்முடைய சாயலாகவும் ரூபத்தின்படியேயும் உண்டாக்கின மனுஷனைத்தான் தம்முடைய காரியங்களுக்காக பயன்படுத்துகிறார். ஜீவனற்ற வஸ்துக்களை அல்ல. ஆதலால் சாத்தான் தன்னுடைய ஞானத்தினால் தொழில்நுட்ப விஞ்ஞானத்தைக்கொண்டு தனது காரியங்களை தனது ஊழியக்காரர்களைக்கொண்டு நடப்பித்து வருகிறான். தேவனுடைய வார்த்தையை, தீர்க்கதரிசியின் செய்திகளை ஜீவன் உள்ளவர்களே பிரசங்கிக்க முடியும். ஜீவன் உள்ளவர்களே மொழிப்பெயர்க்க முடியும்.

43. இது இப்பிரபஞ்சத்தினுடைய அறிவு நாளுக்குநாள் பெருகி போகும் காலம். தேவபக்தியின் வேஷத்தை தரித்து, அதன் பெலனை மறுதலிக்கிறவர்களுடைய காலம். இது கூடுமானால் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கின்ற காலம். இது சத்தியத்திற்கு எதிர்த்து நிற்கும் காலம். காலங்களின் அடையாளங்களை உங்களால் நிதானிக்க முடிகிறதா? விஞ்ஞான ரீதியில் தளவாடங்களை கொண்டு செய்திகளை மொழிப்பெயர்க்கும் கள்ளகபடமுள்ள வேலையாட்களின் மதிகேடு எல்லாருக்கும் இங்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறதினால் அவர்களை விட்டு விலகுங்கள். பிரயோஜனமானவைகளில் ஒன்றையும் நான் உங்களுக்கு மறைத்து வைக்கவில்லை. ஆதலால் நீங்கள் எனக்கு செவிக்கொடுத்து கேளுங்கள். மனமேட்டிமையாயிராதிருங்கள். சத்திய ஆவி உங்களில் இருந்தால், அந்த அபிஷேகம் எல்லாவற்றையும் குறித்து நிச்சயமாக உங்களுக்கு போதிக்கும். ஏனென்றால் அது சத்தியமாயிருக்கிறது. அது பொய்யல்ல. அது உங்களுக்கு போதித்தபடியே அவரில் நிலைத்திருங்கள். இந்த நிருபத்தின் சில பிரதிகளை அதிக பட்சமாக உங்களுக்கு அனுப்பியுள்ளேன். தயவு செய்து என்னுடைய பாரத்தை உணர்ந்து, அவற்றை பிறருக்கு கொடுத்து உதவுங்கள். எனது தபால் பட்டியலில் பெயரில்லாத நம்முடைய ஏனைய சகோதரர்கள் தங்கள் ஆவிக்குரிய மன்னாவை பெற்று பயனடையட்டும்.

செப்டம்பர், 2019.

கிறிஸ்துவின் அன்பில்
சகோ. காலேப் யோசுவா

Puplication Information to the Department of Posts

**PRINTED BOOK**
**Subject to Clause No. 128 P.O. GuideRules.**
Postal Licence, Registration, Permission not required to mail it. **It is an Ordinery Post.**
**Current Postal Rate. Rs. One per every 100 gms**
**To:Dr.Rev,Pr,Bro,Sis.,**

**If Undelivered**
**Please Return to**

**Caleb Joshua**
**32, Jemi Ethiraj Nagar**
**Erayamangalam Road**
**Mappedu, Perambakkam (Via)**
**Thiruvallur District – 631402.**
**Mobile No. 9444701953**

**This Printed Book, Yesuvae Vaarum Edited, Owned and Published by Caleb Joshua from his above address and Printed by V.R. Sermakani, Sakthi Process, 2/1F Kummalamman Kovil St, Tondiarpet, Chennai. 600 081.Ph: 044- 25956006.**